மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

மலர் 2 | மாதமிருமுறை 1-6-53 விலை அணா 4 | இதழ் 3

தமிழகத்தின் பஞ்சத்தைப் போக்க வழிகாட்டக்கூடிய 'பெரியவர்' என்றுகருதி டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரிடம் 'திருவோடு' நீட்டினார் காமராஜர்; டி. டி. கே. 'அப்பயம்' அருளினார்! நிலைமை அறிந்து நிதி வழங்கக்கூடிய 'பெரியவர்' எனக்கருதிச் சிந்தாமணி தேஷ்முக்கிடம் 'திருவோடு' நீட்டினார் டி. டி. கே; தேஷ்முக் கையை விரித்தார்! தமிழகம் கண்டு ...

நாசகாலன்!

"நலங்கிள்ளி"

பருத்த ஒரு புழு சிலந்தி வலையிற் சிக்கில்
பதை பதைக்கப் பிணித்ததனை உண்டு வாழும்;
சிறுத்த பலமீன் உணவாய்ப் பெருமீன் வாழும்;
திகைத்திடவே ஆடுண்டு புலிசினக்கும்;
கருத்துமிகு சொல்லாடுங்கிள்ளை யுண்டு
கழுகுவக்கும்; புறவுண்டு மகிழும் டேகை;
கருத்துயர்ந்தார் மனிதர் பகுத்தறிவு மிக்கார்
கவின் மனிதர் உயிருண்டு வாழ்கின்றாரே! (1)

சிந்திக்கத் தெரியாத விலங்கி னீட்டம்,
தெளிவில்லாப் பறவைஇனம், நீர்வாழ் மீன்கள்
உந்தத் தம் தீ பசியால் ஒன்றையொன்று
உருக்குலைத்தும் உயிர்மாய்த்தும் உண்டு வாழும்;
மந்திக்கு மேற்பட்டோன் மனிதன் உள்ளம்
மாண்புடையோன் பகுத்தறிவால் உலகைவென்றோன்
நிந்திக்கும் செயல் செய்தல் எதற்கோ? ஏழை
நெஞ்சழுக சித்ரவதை செய்கின்றானே! (2)

பசியுணர்வால் இயங்குகின்ற பல்லி,பூச்சிப்
பற்றி யுணுகின்றவெலாம் பாவம் - பாகாய்க்
கசியுமுளம் இறைவனிடம் என்றே வேடம்
காட்டுகின்ற மகன், தன்போல் மகனுக்கந்தோ
பசியென்றால் பாராமல் விரட்டுகின்றான்;
பாட்டாளி மிகநோகச் சுரண்டுகின்றான்;
நிசியெல்லாம் கண்விழித்துப் பணஞ்சேர்க்கின்றான்;
நிலத்திலிது நாகரிகப் பண்பென்றானே! (3)

அறிவுடைமையா? தன்போல் மக்கள் பல்லோர்
அன்றாடம் கஞ்சிக்கில் லாமல் சாக
வெறும் பேச்சு மிகப் பேசிச் சுரண்டி வாழ்தல்—
விதியென்றால் பண்பாடு நாகரிகம்
வெறும் பேச்சா? பறவை விலங்கினத்தில் கீழா
மேலான மக்களினம்? அந்தோ வந்தோ!
பெரும் புலியின் வல்லூறின் அற்பர் கீழோர்
பிறர்வதைத்து வறிதேவாழ் மக்களெல்லாம். (4)

கடல் கடப்பான்; விண்ணேறிக் காற்றினூடே
கடந்துமிகு சேண்செல்வான்; விஞ்ஞானத்தால்
உடல் நோயை நீக்கிடுவான்; அழகார் திங்கள்
உலகதனைச் சென்றடையும் நெறியே காண்பான்;
மடமையிலை என்கின்றான்; ஆனால் இந்த
மண்ணுலகம் அழியஒரு கருவி காண்பான்
நடமாடும் 'தெய்வமெலாம்' நசுங்கித் தேய
நாகரிகம் காண்கின்றான் நாசகாலன்! (5)

மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

1—6—53 திங்கட்கிழமை

வாழ்த்துகிறோம்

ஆறு திங்கள்களுக்குமுன் வீசிய கடும் புயல், சோழமண்டலத்தின் பகுதியான தஞ்சை-திருச்சி மாவட்டங்களில், ஏழை எளிய மக்கள் பலரை வறியர்களாக்கியது; வாட்டி வதைத்தது; வாழ்வின் பொலிவை இழக்கச் செய்தது; உற்றார் உறவினர், மனைவி மக்கள், வீடுவாசல்களைப் பறிகொடுக்கச் செய்தது.

அல்லற்பட்டு அவதியுற்ற மக்களுக்கு உதவி செய்ய நல்ல சிந்தையுடையோர் முன் வந்தால், ஏழை எளியவர்களது துயர் சிறிது நீங்கக்கூடும் என்ற நிலையில், திராவிட முன்னேற்றக் கழகமும் தன் கடமையைச் செய்ய திட்டம் தீட்டியது. 14-12-52ம் நாள் தஞ்சையிலே கூடிய கழகப் பொதுக்குழு, புயலின் கொடுமையை நேரில் கண்டறிந்து, தன் சக்திக்கு மீறியது என்றாலும், ரூ 25,000 புயல்நிவாரண உதவி நிதியாக அளிக்க முடிவு செய்து, அந்தப் பொறுப்பைத் தோழர் மு. கருணாநிதி அவர்களிடம் ஒப்படைத்தது.

நண்பர் மு. கருணாநிதி அவர்கள், அறிஞர் அண்ணா, கே. ஆர். ராமசாமி, சிவாஜி கணேசன், எம். ஜி. ராமச்சந்திரன், எஸ். எஸ். ராஜேந்தரன், டி. வி. நாராயணசாமி மற்றும் பலர் ஆகியோரின் ஒத்துழைப்பை நாடகங்கள் நடத்துவதன் மூலமும், கழகத் தோழர்கள் பலரின் ஒத்துழைப்பை நிதிதிரட்டச் செய்வதன் மூலமும் பெற்று, ரூபாய் இருபத்தேழாயிரத்துக்குமேல் அரும்பாடுபட்டுச் சேர்த்தார். தோழர் கருணாநிதி அவர்களும், ஏனையோரும் செய்த தொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு அழியாப் புகழையும், பெருமையையும், பூரிப்பையும், பெருமிதத்தையும் தருவதாகும்.

நிதிதிரட்டும் போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சிய அறிகுறியான இரு வண்ணக் கொடியின் நிழலில் நின்று, கழகத்தின் சார்பில்தான் பொதுமக்களிடம் நிதி கேட்கப்பட்டது. பொதுமக்களும் மனமுவந்து பெருமிதத்தோடு அளித்தார்கள். எனவேதான் ரூ 25,000 பொருமான வேட்டிகளும், சேலைகளும் கழகச் சின்னம் தாங்கியதாகக் கைத்தறியில் நெய்யப்பட்டு, தஞ்சை-திருச்சி கலெக்டர்கள் மூலம் புயலால் பாதிக்கப்பட்ட ஏழை எளியவர்க்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டது.

இலட்சக் கணக்கான மக்கள் திரண்டிருந்த புயல் நிவாரண ஆடை அளிப்பு விழாக் கூட்டத்திலே அறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்தது போல், கழகம் அளிக்கும் உதவி, சாய்ந்த மரங்களை நிமிர்க்க முடியாது என்றாலும், சரிந்த குடிசைகளை நிலைநாட்ட இயலாது என்றாலும், அழிந்த பயிர்பச்சைகளை மீட்கமுடியாது என்றாலும், இழந்த செல்வங்களை புதுப்பிக்க முடியாது என்றாலும், குடிசைகளிலே வாழும் மக்களிடத்துக் கழகத்தின் சார்பில் ஒருவேட்டியும், ஒருசேலையும் சென்றடையும் போது, அவர்கள் முகத்திலே சிறிதளவு பொலிவு ஏற்பட்டால், உதட்டிலே புன்சிரிப்பு ஏற்பட்டால், உள்ளத்திலே மகிழ்ச்சி ஏற்பட்டால், வாட்டமுற்ற வாழ்வில் ஒரு தேன் துளி சிதறினால் அதுவே நமது நோக்கத்தின் வெற்றியாகும்.

அறிஞர் அண்ணா அவர்கள் அறிவுரையின் பேரில் திட்டம் தீட்டப்பட்டது. திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கும்போது, பொறாமையால் பொசுங்கிய நெஞ்சினர், தங்கள் தீய்ந்த உள்ளத்திலிருந்து கேலி கிண்டல் போன்ற கரியையும் சாம்பலையும் கக்கிக் கொண்டேயிருந்தனர். கழகத்தோழர்கள் அவைகளைக் குப்பையாகச் சேர்த்துக் குவித்துக்கொண்டு, வளரும் திராவிட முன்னேற்றக் கழகப் பயிருக்கு எருவாக இட்டுக்கொண்டனர். தங்களை மாற்றாராகக் கருதிக்கொண்டிருக்கும் பொறாமைக்காரர்கள் நம்மைப்பற்றி என்ன சொல்லுகிறார்கள் என்பதைப் பற்றிக் கவலைப்படாமல், 'தீர்ப்பு பொதுமக்கள் மன்றத்திலே' என்றென்றும் இருக்கிறது என்ற எண்ணத்துடன் நாம் பணியாற்றி வருவோமாக!

எடுத்த செயலை வெற்றிகரமாக முடித்த தோழர் கருணாநிதி அவர்களை வாழ்த்துகிறோம்! அவர் முயற்சிக்கு உதவிபுரிந்த கழகத் தோழர்களை வாழ்த்துகிறோம்! நிதி தந்துதவிய பொது மக்களை வாழ்த்துகிறோம்!

உலகை வென்ற புத்தர்

இந்த ஆண்டு மே 27ந்தேதி புத்தர் விழா எங்கும் கொண்டாடப்பட்டது. 2500 ஆண்டுகளுக்கு முன் (கி. மு. 563ல்) வைசாக முழுமதி நாளன்று புத்தர் பிறந்தார். அவர் பிறந்ததால் அந்த நாள் நன்னாளாயிற்று.

அதே மே 27ந்தேதியன்று நமது நாட்டில் வேறு பல விழாக்களும் நடைபெற்றன. திருவண்ணாமலை தெப்பம், காஞ்சி கருடசேர்வை இவைகளும் அதே நாள் வந்தன. இவற்றில் கலந்துகொள்ளாத நாம், புத்தர் விழாவில் மட்டும் கலந்துகொள்வதற்குக் காரணம் என்ன?

உலகுக்கு உழைத்த உத்தமர் வரிசையில் புத்தர் முதலிடம் பெறுகிறார். உண்மையைக் காணவேண்டும், உலகு வாழ ஒருவழி தேட வேண்டும் எனக் கிளம்பியவர்களில் புத்தர் தலை சிறந்து விளங்குகிறார்.

மக்கள்படும் துன்பங்கண்டு மன்னன் மகன்-அப்பொழுது அவருடைய பெயர் சித்தார்த்தன்-வெளிவந்தான்; அரண்மனையை விட்டு, அரசபோகத்தை விட்டு, அழகு மனைவி யசோதரையையும் பிரிந்து, பட்டாடைகளை வீசியெறிந்து, தான் ஏறிவந்த தேரைப் போகச் செய்து, ஊரை விட்டு அகன்றான் உலகைக் காணவேண்டுமென்ற ஆவலினால்.

அரசுகட்டில் ஏறவேண்டியவன், ஆண்டிகளைப் போலக் காடு மேடுகளில் சுற்றினான்; பொன்முடி தரிக்க வேண்டியவன், பிச்சைப் பாத்திரம் ஏந்தினான்; பஞ்சணையில் வீற்றுப் பாலும் பழமும் உண்டு வாழ வேண்டியவன், கல்தரையில் படுத்துக் கந்த மூலாதிகளை உண்டு வாழ்ந்தான். வெய்யிலில் வாடினான், பனியில் நனைந்தான், உடல் மெலிந்தான், ஆனால் உள்ளமோ உண்மையைத் தேடியபடி இருந்தது. மற்றவர்களின் துன்பத்தைப் போக்க அவன் தன் வாழ்க்கையைத் துன்பமயமாக்கிக்கொண்டான்.

பிராமணர்களின் வேதங்களைச் சித்தார்த்தன் கற்றான், அவன் இதயத்திலே அமைதி உண்டாகவில்லை. ஆத்மாவென்றும் மாயை என்றும் சொன்னார்கள், அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. துன்பங்கள் நிறைந்த உலகம் கண்ணெதிரே இருந்தது.

கோயில்களில் நுழைந்தான், பலி பீடத்திலே வழியும் இரத்தங் கண்டு பதை பதைத்தான். யாகக்கூடங்களுக்குப் போனான், அங்கு கட்டப்பட்டிருந்த ஆட்டின் பரிதாபக் கோலம் அவனை வேதனைக்குள்ளாக்கியது.

குருமார்களை நெருங்கினான், சோமரசத்தின் வாடை அவனைத் துரத்தியது.

அலைந்தான், திரிந்தான்; உண்மையான அறிவைத் தேடி பாடுபட்டதற்குப் பலன் கிடைக்காமற் போகவில்லை. கடைசியாக அறநெறியே உயர்ந்தது, அன்பு மார்க்கமே சிறந்தது என்று கண்டு பிடித்தான். சித்தம் தெளிந்தான், புத்தரானார்.

புதிய மார்க்கத்தைப் புத்தர் கண்டார். அதற்காகவல்ல நாம் அவரைப் போற்றுவது. தான் கண்ட உண்மைகளுக்குத் தெய்வத் தன்மையோ, அசரீரி புராணமோ, எதுவும் சொல்லவில்லை. மற்ற மதத் தலைவர்கள் போல ஆண்டவனின் அவதாரம், தேவாம்சம் பெற்றவன், கடவுளின் பிரதிநிதி, தீர்க்கதரிசி என்று எதுவும் கூறிக்கொள்ளவில்லை. மதம் என்றால் அது ஆண்டவனால் ஏற்படுத்தப் பட்டது; அதற்குச் சான்றாகப் பல அதிசயங்கள் நிகழ்ந்தன போன்ற கதைகள் இருக்கும். ஆனால் இத்தகைய மகிமைகளிலும், அதிசயங்களிலும் புத்தருக்கு நம்பிக்கை கிடையாது. அவருடைய காலத்தில் மேலோங்கியிருந்த ஆரிய மதத்தில் அத்தகைய அதிசயங்கள், புராணங்கள் ஏராளமாக இருந்தன. மக்கள் அவற்றை நம்பி வந்தனர். ஆரிய மதத்தின் புரட்டு முறைகளைப் பின்பற்றித் தன்கொள்கைகளைப் பரப்ப புத்தர் விரும்பவில்லை. அதிசயங்களைச் சொல்லி, மக்களைத் தம் பக்கம் ஈர்க்க வேண்டுமென சில மாணவர்கள் சொன்ன பொழுது அவற்றைக் கண்டித்தார். அதிசயங்களைப் பார்ப்பதால் பலன் கிடையாது; அதில் நம்பிக்கையுள்ளவர்கள் தங்கள் நம்பிக்கையை மேலும் பலப்படுத்திக் கொள்வார்கள், ஆனால் நம்பிக்கையற்றவர்கள் எல்லாம் வெறும் தந்திரம் எனச் சென்று விடுவார்கள். ஆதலால் அதிசயங்கள் காட்டுவது கூடாது, அவற்றை நினைக்கவே எனக்கு ஏளனமும், அருவருப்பும் உண்டாகின்றன. என்னைச் சேர்ந்தவர்கள்

சரியான அறிவு புகட்டுவதன் மூலம் ஒருவனை அன்பு மார்க்கத்துக்குத் திருத்த வேண்டும், அதைத்தான் உண்மையான அதிசயமாக நான் ஏற்றுக்கொள்வேன்.'' என்றுரைத்தாராம்.

மற்ற மதத் தலைவர்கள் சென்ற பாதையில் புத்தர் செல்லவில்லை. ஒவ்வொரு மதமும், தனது வேதமே தேவவாக்கு, அதை நம்புவோர்க்கு மோட்சமுண்டு, நம்பாதவர்க்கு படு நரகம் என்றெல்லாம் போதனை செய்கின்றன. தான் சொல்வதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று புத்தர் எந்த இடத்திலும் சொல்லவில்லை.

புத்தர் அறிவாராய்ச்சிக்கு முதலிடம் தந்தார். எல்லாவற்றையும் அடக்கியாளும் தெய்வ சத்தியென்றோ, அறிவுக்கு அப்பாற்பட்ட கடவுளென்றோ எதையும் புத்தர் ஒப்புக்கொள்ளவில்லை. தெரியாத உலகங்களைப் பற்றிக் கவலைப் படுவதைவிட, தெரிந்த உலகத்திற்காகப் பாடுபடுவது நல்லது என்றார். தன்னுடைய குறைகளைத் தீர்க்க, மனிதன் தன் மீதே நம்பிக்கை கொள்ள வேண்டுமென்றார். அறிவுக்குப் புலப்படுவதைத்தான் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று புத்தர் பல இடங்களில் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

ஒருசமயம் காளாம நாட்டு அரச குடும்பத்தினர் புத்தரைப் பார்த்த பொழுது, “புத்தர் பிரானே! பிராமணர்களும், மற்ற மதத்தினரும், தாங்கள் கூறுவதே முழு உண்மை, மற்றவர் கூறுவதனைத்தும் முழுப்பொய் என்று ஒவ்வொருவரும் சொல்லுகிறார்கள். இதில் யாரை நம்புவது?'' என்று கேட்டார்கள். அதற்குப் புத்தர், “சொல்பவர்களைப் பற்றி நம்பிக்கையோ அவநம்பிக்கையோ கொள்ளக் கூடாது, சொல்லப்பட்ட பொருளைப்பற்றி சந்தேகம் வரவேண்டும்.’

பல தலைமுறைகளாக, வந்தது பல இடங்களில் காணப்படுகிறது என்ற காரணத்திற்காக எதையும் கண்மூடித்தனமாக நம்பி விடாதீர்கள். அதிகமானவர் சொல்லுகிறார்கள் என்பதற்காகவும் எதையும் ஏற்றுக் கொள்ளாதீர்கள் பழைய முனிபுங்கவர் எழுதியுள்ளார் என்று ஆதாரங் காட்டினாலும் நம்பி விடாதீர்கள். அபூர்வமானதாகயிருக்கிறது ஆதலால் இதை ஒரு தேவனோ அல்லது அதிசயப்பிறவியோ உண்டாக்கியிருக்க வேண்டும் என்று எண்ணிவிடாதீர்கள். உங்கள் மனத்திற்குப் பிடித்தமானதாயிருக்கிறது என்பதற்காகவும் ஒன்றை எடுத்துக் கொள்ளாதீர்கள். எதையும் கவனித்து, ஆராய்ந்து, பகுத்தறிவுடன் ஒத்துவந்தால், எல்லோருக்கும் நன்மை பயப்பதாகவும் இருந்தால், அதை ஏற்றுக்கொண்டு, அதன் படி வாழுங்கள்'' என்று சொன்னார்.

இந்தப் பகுத்தறிவுப் பிரச்சாரத்தை **2500** ஆண்டுகளுக்கு முன் புத்தர் பரப்பினார். மத வெறியும் புராணப் புளுகும், அஞ்ஞானமும், கண்மூடித்தனமும் நிறைந்திருந்த நாட்டிலே, பகுத்தறிவின் முதல்வராக புத்தர் உலவினார்.

புத்தர் கூறிய கருத்தைத்தான் நாம் இன்று சொல்லுகிறோம். வேதங்கள் கூறியது என்றாலும், வியாசர் வரைந்தது என்றாலும், நான்முகன் படைத்தது என்றாலும், நால்வர் பாடியது என்றாலும் எதுவும் அறிவுக்குப் பொருந்தி வந்தால் ஒத்துக்கொள்ளுவோம் என்று நாம் சொல்லுகிறோம். நம்முடைய பகுத்தறிவு இயக்கத்தின் மூதாதை புத்தர். அவருடைய சாகாத் தலைமுறையினர் நாம்தான். புத்தர் காட்டிய வழியில் அவரது மதத்தினர் கூட செல்லவில்லை. நாம்தான் சென்றிருக்கிறோம்.

வைசாக முழுமதியில் புத்தர் பிறந்தார், வையகத்தின் அறியாமை எனும் இருளை நீக்கி அன்பு எனும் குளிர்நிலவைத் தந்தார். பேதம் நிறைந்த நாட்டிலே அவர் பேச்சு தென்றல் கீதமாயிற்று. அவருடைய பொன்மொழிகள் பசித்துக் கிடந்தோருக்குப் புத்தமுதாயிற்று.

புத்தர் வாழ்ந்து 25 நூற்றாண்டுகளுக்கு மேலாகிறது. இருந்தும் அவருடைய அறிவுரை அன்புமார்க்கம், தூய்மையான வாழ்வு நம் கருத்தைக் கவர்ந்துள்ளன. திருவண்ணாமலையில் காணாத அறிவொளியை, காஞ்சி கருடாழ்வாரால் தரமுடியாத கருத்து இன்பத்தை புத்தரின் வரலாற்றில், அவருடைய அறிவுரைகளில் பெறுகிறோம்.

உலகுக்கு உழைத்த உத்தமன், உண்மைக்காகப் பாடுபட்ட உயர்ந்தோன், தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன், அன்பு மார்க்கத்தைக் கண்ட தயாளன், மனிதாபிமானத்தை வளர்த்த பெரியோன், அன்பு, அறிவு, நேர்மை இவற்றைத் துணைகொண்டோன், தனிப்பெரும் மனிதன், என்ற அளவில் இந்த உலகு புத்தருக்கு என்றும் கடமைப் பட்டிருக்கிறது.

சித்தார்த்தர் புத்தரானார்! புத்தர் சாக்கிய நாட்டை வெறுப்பால் இழந்தார்; ஆனால் உலகை அன்பால் வென்றார்! உலகை வென்ற அந்த உத்தமன் கருத்துக்கள் நீடூழி வாழ்க!

நம்ம சர்க்கார்

நஷ்டம் ரூ. 1,34,000

இந்தியப் போர்ப்படை வீரர்களுக்குக் கம்பளங்கள் தேவைப்பட்டதாம். தேவையை

நிறைவேற்ற இங்கிலாந்தில், இந்திய ஹைகமிஷனராக இருந்த தோழர் கிருஷ்ண மேனன் அவர்கள், 1949 ல் பழைய விலையில் 50,000 கம்பளங்கள் வாங்கினாராம். அவைகள் இந்தியா வந்து சேர்ந்த போது அவைகளில் ஒன்று கூடப் பயன்படுத்துவதற்கில்லை என்று பட்டதாம். விற்றவரிடம் திருப்பிக் கொடுத்துவிடக் கேட்டபோது செலவுத் தொகைகளை ஏற்றுக் கொள்ளாமல், உருப்படிகளை மட்டும் மூன்றில் இரண்டு பங்கு விலைக்கு வேண்டுமானால் திரும்பப் பெற்றுக் கொள்கிறோம் என்றார்களாம். அதற்கு இணங்க மறுத்து இந்திய அரசாங்கப் பாதுகாப்பு இலாகா, உருப்படிகளை ஏலத்திற்கு விட்டதாம். ஏலத்தில் விட்டதால் இந்திய அரசாங்கத்துக்கு ஏற்பட்ட நஷ்டம் ரூ. 1,34,000. எப்படி 'நம்ம சர்க்கார்!'

* * *

ஆச்சாரியாரும் சேரி அழகும்!

நகரச் சீரமைப்புத் திட்டக்காரர்கள் நகரில் ஆங்காங்கு காணப்படும் சேரிகளும், குப்பங்

களும், குடிசைகளும் நகரின் அழகைக் கெடுக்கின்றன என்று கருதி, அவைகளை அழித்து விடவும், நல்ல கட்டிடங்களாக மாற்றவும் முற்படுகிறார்களாம். இந்தச் செயல் ஆச்சாரியார் சர்க்காருக்குப் பிடிக்கவில்லை. எனவே 'நம்ம சர்க்கார்' உத்தரவு ஒன்று வெளிப்படுத்தியுள்ளது. "குடிசைகளும், குடிசைகள் சேர்ந்த சேரிகளும் பொதுநலத் தீங்கிழைப்பவை என்றோ அழகற்றவை என்றோ எப்பொழுதும் கருத வேண்டிய அவசியமில்லை, என்று அரசாங்கம் எண்ணுகிறது. மாறாகச் சிமெண்ட் கட்டிடத் தொகுதிகளுக்கிடையில் ஆங்காங்கு விட்டு விட்டு கிராமப் பகுதிகள் காணப்படுவது நகரத்திற்குத் தனி அழகைக் கொடுப்பதாகும் என்றும் கருதுகிறது" என்பது சென்னை அரசாங்கத்தின் உத்தரவு. அந்த அழகான சேரிப் பகுதிகளுக்கு ஆச்சாரியாரும் அவரது துணை அமைச்சர்களும் எப்பொழுது நகரப் போகிறார்கள்? அந்த நன்னாளை எப்பொழுது எதிர்பார்க்கலாம்?

* * *

ஆதிக்கமும் அச்சமும்

மங்களூர் நகரசபை அளித்த வரவேற்பு இதழுக்குப் பதில் கூறும்போது, மைசூர் முத

லமைச்சர் கே. அனுமந்தையா அவர்கள், ஐக்கிய கருநாடகம் அமைவதற்கு மைசூர் மக்களோ, மைசூர் அரசாங்கமோ தடையாக நிற்கிறார்கள் என்பது தவறுடையதாகும் என்ற கருத்தை வெளியிட்டார். அப்படி வெளியிடும்போது, "ஐக்கிய கருநாடகம் அமைவதற்கு ஏதேனும் தடை இருக்கிறதென்றால், அந்தத் தடை யூனியன் ஆட்சிபீட அதிகாரத்திலிருப்பவர்களிடமிருந்துதான். அதுவும் பெரும்பகுதி அதிலுள்ள வடநாட்டுக்காரர்களிடமிருந்துதான். ஏனென்றால் தென்இந்திய அரசுகள் மொழிவழி பிரிக்கப்பட்டால், அது வடநாட்டு வளர்ச்சியைக் கெடுத்துவிடும்; இந்தி மொழி பரவுவதைத் தடுத்துவிடும்; நாட்டில் ஒற்றுமையின்மையை உண்டாக்கிவிடும் என்று அவர்கள் எப்பொழுதும் அச்சப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்." என்ற கருத்தைத் தெளிவுபடக் கூறியுள்ளார்.

"ஒரே மொழி, ஒரே நாடு" என்ற வாசகத்தின் கீழ், வட நாட்டார்கள் தென்னாட்டாரை அடக்கி வைக்க முயலுகிறார்கள். இதைப்பற்றி நாம் விளக்கிக் கூறும்பொழுதெல்லாம் நாட்டுத் துரோகிகள் என்று தேசியத் தோழர்களால் தூற்றப்பட்டோம். "நான் சென்ஸ்" என்று தேசியத் தலைவர், இந்தியாவின் பிரதமர் நேருவும் உறுமினர். இன்று அதே கருத்தைத் தோழர் அனுமந்தையா காங்கிரசைச் சேர்ந்தவர், மைசூர் முதன் மந்திரி கூறுகிறார். இதை யாவது தேசியத் தோழர்கள் கவனித்து, உண்மை நிலைபற்றிய தெளிவைப் பெறுவார்களாக!

வரலாறு

நாலந்தா

இரா. செழியன் எம். ஏ.

★

வட நாட்டில் பிராமணமதம் மேலோங்கி யிருந்த சமயத்தில், கல்வி கற்கும் உரிமை முழுவதும் மேல் ஜாதியினரான பிரம்ம குலத்தினருக்கே இருந்தது. ஓதலும், ஓதுவித்தலும் பிராமணர்களின் முக்கிய வேலைகளாக இருந்தன. ஏனைய வகுப்பினர்கள் உழியஞ் செய்து பிழைக்கமட்டும் படைக்கப் பட்டிருந்தனரேயன்றி, கல்வி கற்கும் உரிமை யற்றிருந்தனர். குருகுலம் இருந்தது; அங்கே ஒரு குலம் மட்டும்தான் அனுமதிக்கப்பட்டது; வேறெவரும் நுழைய முடியாது. வேத பாராயணம், வியாசருக்கு வியாக்கியாணம், வேதாந்த விசாரணை, காவிய ரசனை என்று பூசுரர் மட்டும் ஏடுகளைப் புரட்டிக் கொண்டிருந்தனரேயன்றி, மற்ற நீச வகுப்பினர் கல்வி வாடையெதுவுமின்றி, விலங்கோடு விலங்காய் வாழ்ந்து வந்தனர். மேலும் தாங்கள் செய்து கொண்ட ஏற்பாட்டுக்கெல்லாம், பிராமணர்கள் காட்டிய ஆதாரம் வேதம். வேதமோ தேவமொழியில் இருந்தது. தேவமொழியான சமஸ்கிருதமோ மக்களுக்குப் புரியாத மொழி. யாருக்காவது புரிந்தால்கூட பூதேவரைத் தவிர வேறு யாரும் அந்த வேதத்தைப் படிக்கக் கூடாது. படிக்க வேண்டாம், கேட்டாவது தெரிந்து கொள்ளலாமென்றால், படிப்பதைவிட அதைக் கேட்பது இன்னும் பன் மடங்கு பாபம் என்று அதே வேதத்தில் சொல்லி யிருப்பதாகப் பிராமணோத்தமர்கள் சொன்னார்கள். மக்கள் என்ன செய்வார்கள்? அவர்களைக் கட்டுப் படுத்திய ஏற்பாடுகள் அவர்களுக்கும் புரியாத மொழியில், தெரியாத வகையில் வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் புத்தர் வந்தார்; அன்பு நெறியைப் போதித்தார், மக்களுக்குப் புரியும் படியான பாலி மொழியில். புத்த கோட்பாடுகளைச் சொல்ல, ஒரு வேத மொழியோ, தேவ மொழியோ தேடப்பட வில்லை; அதற்கு மாறாக பிராமண மதத்தினரால் நீச மொழியென ஒதுக்கப்பட்ட ஆனால் மகத நாட்டின் மக்களால் பேசப்பட்ட பாலி மொழியில் நூல்கள் எழுதப்பட்டன. புத்த மார்க்கத்தில் புரியாத மொழி என்றோ, தொடாத ஏடு என்றோ ஒன்று இல்லை. படிக்க ஒருசாதி பாடுபட ஒரு சாதி என்ற பாகுபாடுகள் அங்கு கிடையாது. எனவே கல்வியைப் பெறும் உரிமை எல்லோருக்கும் கிடைத்ததுடன், அதற்கான வசதிகளும் செய்து தரப்பட்டன. புத்தரின் பொன்மொழிகளை வேறு நாடுகளில் பரப்பிய புத்த சாதுக்களும், அந்தந்த நாட்டு மொழியிலேயே பேசினார்கள்; எழுதினார்கள். மேலும் ஆங்காங்கு சிறு சிறு பள்ளிக்கூடங்களை உண்டாக்கி, ஏழை மக்களின் அறியாமையைப் போக்கப் பாடுபட்டனர். புத்த சமயத்தினரின் பெரு முயற்சியால் கல்வி கேள்வி வளர்ந்தது. இருள் கவிந்த நாட்டிலே அறிவுச் சுடர் தோன்றியது.

அவ்வாறு பரவிய கல்வி வளர்ச்சியின் சிறப்புக்கு எடுத்துக் காட்டாக, புத்தமதப் பண்பாட்டின் கருவூலமாக, அன்பு நெறியிலே தெளிவு பெற்ற ஆசிரியர்களின் இருப்பிடமாக **நாலந்தா, விக்கிரமசாலா** என்ற இரு பல்கலைக் கழகங்கள் எழுந்தன. இரண்டும் புத்த மதத்தின் தாயகமாக விளங்கிய மகத நாட்டில் இருந்தன. இவற்றில் அளவிலும் பெருமையிலும் தலை சிறந்து விளங்கியது நாலந்தா பல்கலைக்கழகமாகும். அதன் அமைப்பையும் முறையையும் ஆராய்ந்த வரலாற்றாசிரியர்கள், தற்காலத்திய பல்கலைக்கழகங்களுக்குக் கூட நாலந்தா ஒரு எடுத்துக் காட்டாக இருக்கிறது என்று கூறுகிறார்கள்.

நாலந்தா பல்கலைக்கழகம் தற்காலத்தில் பீகார் மாகாணத்தில் ராஜகிரி என்னுமிடத்திலிருந்து எட்டு மைல் தூரத்தில் இருந்தது. அந்தக் காலத்தில் அது மகத நாட்டைச் சேர்ந்ததாகும். பாடலிபுரம் நாட்டின் தலைநகராக இருந்தது. நாலந்தா பல்கலைக்கழகத்தின் ஆரம்பம் ஏறத்தாழ கி. பி. 450 என்று கூறலாம். மகத நாட்டு மன்னன் சக்ராதித்தியன்

என்பவன் அந்தப் பல்கலைக்கழகத்தை வளர்த்து அங்கு புத்த சங்கத்தினர் தங்கப் பெருங் கட்டிடமொன்றை அமைத்துத் தந்தான். மேலும் அதற்கு மானியமாகப் பல கிராமங்களை யும் வழங்கினான். அவனையடுத்து வந்த அரசர்களும் மேலும் பல கட்டிடங்களைக் கட்டி, உதவிகள் செய்து பல்கலைக்கழகத்தை வளர்த்தனர்.

மிகவும் வளர்ந்த நிலையில் நாலந்தா மிகப் பெரிய பல்கலைக்கழகமாக விளங்கியது. அங்கு 10,000-க்கு மேற்பட்ட மாணவர்கள் தங்கியிருந்து கல்வி பயின்றனர். அதற்கு மான்யமாக 200 கிராமங்கள் இருந்தன. இந்த கிராமங்களிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டு பல்கலைக்கழகம் நடத்தப்பட்டது. அந்தப் பல்கலைக்கழகத்தில் இருந்த ஆசிரியர்கள் 1500 பேர் ஆகும். ஆசிரியரும், மாணவரும் ஒருங்கே இருந்து கல்வி பயின்றனர். நாலந்தாவின் புகழ் நான்கு திக்கிலும் பரவியிருந்தது. நாலந்தாவில் கல்வி பயில சீனு, திபெத்து, சுமத்ரா, இலங்கை, தென்னாடு போன்ற தூர இடங்களிலிருந்தெல்லாம் மாணவர்கள் வந்தனர். பிரயாணங்களில் ஏற்படுகிற துன்பங்களைப் பொருட்படுத்தாமல், நாலந்தாவை அடைய வேண்டும் என்ற ஒரே ஆர்வத்துடன், காலால் நடந்தும், காடுகளைக் கடந்தும், கடலைத் தாண்டியும், மலைமேல் ஊர்ந்தும் மாணவர் கூட்டம் வந்தபடி இருந்தது. இவ்வாறு சீனுவிலிருந்து வந்த யுவான் சாங், ஐ-டிசிங் என்ற இருவர்கள் எழுதி வைத்த குறிப்புகளிலிருந்துதான் நாலந்தாவின் பெருமை நமக்கு ஓரளவுக்குத் தெரிகிறது.

"சிற்ப வேலைப்பாடமைந்த மாடங்கள், கண்ணைக் கவரும் வனப்புடைய கும்பங்கள், ஒன்றோடொன்று போட்டியிட்ட வண்ணம் எழுந்து விளங்கின. காலைப் பனியிலே சிக்கிய அவை, வான வெளியில் மிதப்பவை போன்றிருந்தன. தெளிந்த நீரையுடைய சிறு குளங்களில் நீல மலர்களும் சிவந்த அல்லியும் அசைந்து கொண்டிருந்தன. இவற்றையடுத்து இள மரங்கள் அடர்ந்த பொழில் வருவோரை வரவேற்றது. பின் பாதை யோரத்தே நின்ற உயர் மரங்கள் வெய்யிலைத் தடுத்து, நிழலைத் தந்தன. பின் நாலடுக்குகளைக் கொண்ட மாடிக் கட்டிடங்கள் இருந்தன. வண்ணம் தீட்டப் பட்ட தூண்கள், சிற்பத் திறனமைந்த கம்பங்கள், பொலிவுடன் விளங்கும் புத்த பீடங்கள், பலவகையில் நிறங்களை மாற்றி ஒளி தரும் கூரை இவைகள் அந்தக்கட்டிட அமைப்பில் காணப்பட்டன" என்று யுவான்சாங் நாலந்தாவைப் பற்றிக் கூறுகிறார். யுவான்சாங் கி. பி. 630ல் இந்தியாவுக்கு வந்தார். நாலந்தா பல்கலைக்கழகத்தில் 19 மாதங்கள் தங்கிப்புத்த மதக் கோட்பாடுகளையும், மற்ற அறிவுத் துறைகளையும் கற்றார். பின் இந்தியாவின் பல்வேறு பகுதிகளையும் பார்த்துவிட்டு கி. பி. 645ல் சீனு திரும்பினார். தாம் இந்தியாவில் கண்டவற்றையும் கேட்டவற்றையும் பற்றி விவரமாக எழுதியுள்ளார். அந்தக் குறிப்புகளிலிருந்தே மேற்கண்ட பகுதி எடுக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தில் சாதி வேறுபாடு கிடையாது; ஏழை பணக்காரன் என்ற பாகுபாடும் கிடையாது. உண்பதிலும், கல்வி கற்பிப்பதிலும், எல்லோரும் சமமாகவே கருதப்பட்டனர். ஆனால் நாலந்தாவில் படித்தவன் என்பதில் தனிப்பெருமை இருந்தது. அந்தப் பெருமைக்கு மட்டும் ஆசைப்பட்டுப் பலர் வரத் தலைப்படுவார்கள். அவர்களைத் தடுப்பதற்கும், உண்மை ஆர்வமுள்ளவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும், துவார பண்டிதர்கள் (வாயில் ஆசிரியர்கள்) இருந்தனர். பல்கலைக்கழகத்தில் சேர விரும்புவர்கள் முதலில் இந்த வாயில் ஆசிரியர் ஒருவரைப் பார்க்க வேண்டும். அவர் கேட்கும் கேள்விகளுக்குத் திருப்திகரமான முறையில் பதில் தந்தால்தான் பல்கலைக்கழகத்தில் இடம் கிடைக்கும். இந்த வாயில் ஆசிரியர்கள் கல்வி கேள்விகளில் சிறந்தவர்களாக இருந்தார்களாம். அவர்களைப் பற்றி யுவான்சாங் குறிப்பிடும் பொழுது "வாயில் ஆசியரின் கடினமான கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாமல், வருகிற பத்துபேரில் ஏழு அல்லது எட்டுப் பேர்கள் தோற்றுவிடுவார்கள். வெற்றி பெற்ற இரண்டு, மூன்று பேர்கள் பல்கலைக் கழகத்தினுள் செல்வார்கள்" என்று சொல்லுகிறார். யுவான்சாங்கும் அவ்வாறு ஒரு வாயில் ஆசிரியரின் கேள்விகளுக்குப் பதில் சொன்ன பின்தான், பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார்.

யுவான்சாங் சேர்ந்த சமயத்தில் 10,000 திற்கு மேற்பட்ட மாணவர்கள் நாலந்தாவில் இருந்தனர். 1510 ஆசிரியர்கள் இருந்தனர். ஒரே சமயத்தில் நூறு வகுப்புகளுக்கு மேல், பல திறப்பட்ட நூல்களைப் பற்றியும்,

பொருள்களைப் பற்றியும் நடத்தப்பட்டன. புத்தக் கோட்பாடுகள் பதினெட்டு வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இவற்றுடன் இலக்கணம், தர்க்கம், தத்துவம், வானநூல், மருத்துவம் போன்று வேறு பல வகைகளும் அந்தப் பல்கலைக்கழகத்தில் சொல்லித் தரப்பட்டன. பலதிறப்பட்ட அறிவு நூல்கள் ஐம்பது பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன என்று யுவான் சாங் குறிப்பில் கூறியுள்ளார். அந்தப் பாகுபாடு என்னவென்று இப்பொழுது தெரியவில்லை. அங்கிருந்த ஆசிரியர்களில் ஆயிரம் பேருக்குச் சில தொகுதிகள் மட்டுமே தெரிந்திருந்ததாம். அடுத்தபடியாக உயர்ந்திருந்த ஐந்நூறு ஆசிரியர்கள் முப்பது தொகுதிகள் வரைப் படித்து தேர்ச்சிப் பெற்றிருந்தார்களாம். அவர்களுக்கும் மேலிருந்த பத்து ஆசிரியர்கள் மட்டுமே ஐம்பது தொகுதிகளையும் ஆராய்ந்து அறிந்திருந்தனராம். பல்கலைக்கழகத்தின் பொறுப்பு "அறநெறித் தலைவர்" என்ற பதவியின் கீழ் இருந்தது. இது தற்காலத்தில் 'வைஸ்சான்சலர்' என்று கூறப்படும் பதவியை ஒத்ததாகும். யுவான்சாங் காலத்தில் பல்கலைக்கழகத் தலைவராக இருந்தவர் சில்பத்திரா என்பவராவார். இவர் வங்க நாட்டு அரச குடும்பத்தைச் சேர்ந்தவர். புத்த சமயத்தின்பால் பற்றுக் கொண்டு, தன் அரச வாழ்வைத் துறந்து, பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பயின்று, அதன் தலைவரானர். அவர் ஒருவரிடந்தான் எல்லாத் தத்துவங்களையும், கோட்பாடுகளையும் நன்றாக விளக்கிக் காட்டும் ஆற்றல் இருந்ததாம். இந்தத் தலைவரின் கீழ் தான் யுவான்சாங் கல்வி பயின்முர்.

நாலந்தா கட்டிடங்கள் பல நாலடுக்கு மாடங்களாகவும், சில ஆறடுக்கு மாடங்களாகவும் இருந்தன. ஐந்து பெரிய புத்தசாதுக்கள் மடங்களும், எட்டு பகுதிகளான விடுதித் தொடர்களும் இருந்தன. நாலந்தாவின் பெருமைக்கு நடுநாயகமாக விளங்கிய நூல் நிலையம், தர்மகனம் (அறச்சாலை) என்ற இடத்தில் அமைந்திருந்தது. அங்கு ரத்ன சாகரம், ரத்ன தாதி, ரத்ன ரஞ்சகம் என்று பெயரிடப்பட்ட மூன்று கட்டிடங்கள் இருந்தன. இவைகளில் இரண்டாவது கூறப்பட்ட ரத்ன தாதி ஒன்பது அடுக்கு மாடிகளையுடையது. இதில் புத்த தர்மத்தைப் பற்றிய நூல்கள் சேகரிக்கப்பட்டிருந்தன. புத்தசாதுக்களும், பல்கலைக்கழகத்தில் படித்துத் தேர்ந்தவர்களும், ஆசிரியர்களும் இந்த நூல் நிலையத்துக்குப் புது நூல்களைச் சேர்ப்பதிலும், பழைய சுவடிகளைப் பெயர்த்தெழுதி பாதுகாத்தலிலும் கண்ணுங் கருத்துமாயிருந்தனர். இந்த வேலைக்காகவே, பால வம்சத்தைச் சேர்ந்த தேவபால தேவன் என்ற அரசன் சில கிராமங்களை மான்யமாகத் தந்திருந்தான்.

நல்லதொரு கல்விக்கூடமாக நாலந்தா விளங்கிய போதிலும், புத்த சமயத்தைச் சேர்ந்ததாக இருந்ததால், பிராமண மதத்தினரின் எதிர்ப்பு இருந்து வந்தது. புத்த சாதுக்களுக்கும் வைதிக மார்க்கத்தினருக்கும் அடிக்கடி பூசல்களும், வாக்கு வாதங்களும், சிறு சண்டைகளும் இருந்துகொண்டேவந்தன. மகத நாட்டு அரசர்கள் புத்த மதத்துக்கு ஆதரவு தந்ததால், அந்நாட்டில் புத்த மதத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு இருந்தது. ஆனால் இந்த அரசர்களின் கீழ் இருந்த மற்ற நாடுகளில் பௌத்தர்கள் துன்புறுத்தப் பட்டனர் என்று யுவான் சாங் எழுதியுள்ளார். அரசன் புத்த மதத்தை ஆதரித்தால் கூட, புத்த மதத்தை அழிக்க வைதிக மதத்தைச் சேர்ந்த பிராமணர்கள் மறைமுகமாகச் சூழ்ச்சி செய்யாமலில்லை. புத்தசபையில் நடந்த ஒரு சம்பவத்தை யுவான்சாங் தனது புத்தகத்தில் குறித்துள்ளார். புத்தசபையில் ஆண்டுதோறும் புத்தர் விழா நடைபெறும். யுவான் சாங்கும் அதற்கு ஒரு ஆண்டு போயிருந்தார். அப்பொழுது சிலாதித்தியன் என்ற மன்னன் முன்னின்று நடத்தினன். விழா சிறப்பாக நடந்து கொண்டிருக்கும் பொழுது அங்கு போடப்பட்டிருந்த பந்தல் தீப்பற்றியது. அதனல் ஏற்பட்ட குழப்பத்தில், அரசன் சிலாதித்தியனையே கொன்றுவிட பிராமணர்கள் திட்டமிட்டுத் தயாராக இருந்தனர் என்றும், ஆனலும் அரசன் தப்பிவிட்டானென்றும், யுவான்சாங் தாம் கண்டதைப் பற்றி குறித்துள்ளார்.

மகத நாட்டின் ஆதிபத்தியம் குறைந்த பின் அதன் ஆதரவில் வாழ்ந்த நாலந்தாவின் பெருமையும் சீர்கேடடைய ஆரம்பித்தது. சிறுகச் சிறுக மற்ற சமயத்தினரும் நாலந்தாவினுள் புகுந்தனர். பிராமண மதத்தின் அடிப்படையான உருவ வழிபாடு, மாந்திரீக முறை, சக்தி உபவாசனை போன்றவை புத்த மதத்தைச்



நாலந்தாவின் அழிந்த தோற்றம்

சார்ந்த நாலந்தாவிலும் நுழைந்தன. பல்கலைக் கழகத்திலே வேதங்கள் பயில இடம் கிடைத்தது. புத்த மதத்தின் பெருமை குறையக் குறைய, நாலந்தாவின் எழிலும் குறைந்தது. இத்துடன் வேற்று நாட்டினரின் படையெழுச்சிகள் மகதத்தை மிக அல்லலற்படுத்தியதுடன் நாலந்தாவையுஞ் சீரழித்தன.

கடைசியாக வைதிக மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் வலுப்பெற்று, பல்கலைக்கழகத்தினுள் நுழைந்து யாகம் நடத்தத் தலைப்பட்டனர். இதனால் அவர்களுக்கும் புத்த சாதுக்களுக்கும் பூசல் வந்தது. ஆனால் யாகம் நடத்தியவர்கள் விடாப்பிடியாக ஓம குண்டத்தை உண்டாக்கி யாகத்தை நடத்தினர். சூது மதியினர், சூழ்ச்சி எண்ணத்தினர் அத்துடன் நிற்கவில்லை. சமயம் பார்த்திருந்து, யாகக் குண்டத்திலிருந்த நெருப்பை எடுத்து நாலாபக்கங்களிலும் வீசி எறிந்தனர். எங்கும் கோரத்தீ மூண்டது. மாடங்கள் சரிந்தன; கூடங்கள் விழுந்தன; சிலைகள் வெடித்தன; சிற்பங்கள் அழிந்தன; புத்த பீடங்கள் கவிழ்ந்தன; தீயிலே சிக்கிப் புத்த சாதுக்கள் பலர் மடிந்தனர். தீயின் கோர நர்த்தனங் கண்டு, யாகக் குண்டத்தினர் ஆனந்தக் கூத்தாடினார்கள்; கூக்குரல் கேட்டுக் களிப்படைந்தனர்; புத்தக் கலை அழிவது கண்டு அக்னிதேவனை வாழ்த்தினர். எல்லாவற்றிலும் கோரமான காட்சி, நாலந்தாவின் தனிச் சிறப்பாக, புத்த மதத்தினரின் ரத்னமாக மதிக்கப்பட்ட நூல்நிலையம் தீயிலே கருகிச் சாம்பலாகியது. அந்த நூல்நிலையத்தை வளர்க்க ஆறு நூற்றாண்டுகளாகப் பலர் பாடுபட்டனர்; ஆனால் ஒரே நொடியில் ஒரு சிலரின் சூழ்ச்சியால் அழிந்தது!

யாகக் குண்டத்துத் தீயிலே புத்த மார்க்கம் கருகியது; அக்னி வழிபாட்டினால் அன்பு மார்க்கம் அழிந்தது!

யாகக் குண்டத்துத் தீ வளர்ந்தது; புகை கிளம்பிற்று; அதனால் புத்தரின் பொன்னொளி மங்கியது!

யாகக் குண்டத்துத் தீ வளர்ந்தது; ஆனால் மகத நாட்டில் நீங்காத இருள் சூழ்ந்தது!

யாகக் குண்டத்துத் தீ வளர்ந்தது; அதனால் நாலந்தாவிலிருந்து வீசிய அறிவொளி அணைந்தது!

நாலந்தா இன்று அழிந்து கிடக்கிறது. ஆறடுக்கு மாடங்கள், அழகான கூடங்கள், கண்கவரும் சிற்பங்கள், கருத்தைக் கவர்ந்த நூல்நிலையங்கள் என்றெல்லாம் புகழ்பெற்ற நாலந்தா இன்று கற்குவியல்களும், முட்புதர்களும் நிறைந்த பாழ்வெளியாய்க் காணப்படுகிறது.

நாலந்தா அழிந்து கிடக்கிறது, புத்தரின் அன்பு மார்க்கம் இந்தியாவில் அழிந்து கிடப்பதைப் போல!

பண்டைக்காலத் தமிழகத்தின் பல பகுதிகளிலும், புத்தரின் அறக்கொள்கைகளைப் பரப்பும் அறவோர்கள் (சாதுக்கள்) பரவியிருந்தார்கள். அறக்கொள்கைகளை ஆராயவும், ஆராய்ந்தவற்றை மக்களுக்கு எடுத்துச் சொல்லவும் ஆங்காங்கு நிலையங்கள் அமைத்துக் கொண்டார்கள். அப்படிப்பட்ட நிலையம் 'அறவோர் பள்ளி' என்று அழைக்கப்பட்டது. பெரியோர்க்கும், சிறியோர்க்கும் கொள்கை கற்பிக்க ஏற்பட்ட பள்ளி, நாளடைவில் சிறுவர்களின் நன்மையின் பொருட்டு கல்வி கற்பிக்கவும் அந்த அறவோர்களால் பயன்படுத்தப்பட்டது. அதனால்தான் கல்வி கற்பிக்கும் சாலைக்குப் 'பள்ளிக்கூடம்' என்ற பெயர் வழங்கத்தலைப்பட்டு, இன்று வரை நடைமுறையில் இருந்து வருகிறது. பள்ளிக்கூடப் பெயருக்கும், அமைப்புக்கும் முதற்காரணம் புத்த அறவோர்களேயாவர்.

புத்த சமயத்தினர் வழங்கிய பள்ளி என்ற சொல்தான், பிற்காலத்தில் தோன்றிய இஸ்லாமியரின் மசூதிக்கும் இடப்பட்டு, 'பள்ளி வாசல்' என்று இன்றும் அழைக்கப்படுகிறது.

தாய்மையும், குழந்தைநலப் பாதுகாப்பும்

['டாக்டர்']

I

தாய் விடை காண வேண்டிய வினாக்கள்

(1) தன்னுடைய குழந்தைக்கு எடை வாரந்தோறும் நிதானமான முறையில் அதிகரித்து வருகிறதா?

(2) அதனுடைய தசை உறுதியாகவும். அதன் கன்னமும் தோலும் வளப்பமாகவும் வனப்பாகவும் காணப்படுகின்றனவா?

(3) அதனுடைய கண்கள் ஒளி வீசுகின்றனவா?

(4) உணவு உட்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறதா? உணவு வேண்டி ஆவலூட்டும் பசி அதனிடத்தே தென்படுகிறதா?

(5) தன்னைச் சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதைக் காண்பதிலே ஆர்வங்காட்டுகிறதா?

(6) தன்னுடைய கை கால்களை உதைத்துக்கொண்டு மகிழ்ச்சியுடன் விளையாடுகிறதா?

(7) காலாகாலத்தில் அதனுடையபற்கள் தோன்றுகின்றனவா?

(8) அதனுடைய மென்மையான பாகமாகிய 'உச்சி' காலாகாலத்தில் (18 மாதத்தில்) மூடப்பட்டு அழுத்தம் அடைகிறதா?

(9) நீண்டநேரம் அமைதியாகத் தூங்குகிறதா?

II

ஒரு ஆண்டுக்கு உட்பட்ட குழந்தைக்கான அன்றாட அட்டவணை

காலை 6-00 மணி-உணவு ஊட்டுதல்
,, 7-30 ,, -குளிக்கப்படுத்துதல், நிறுத்துப் பார்த்தல், விளையாடவிடுதல்
,, 9-00 ,, -உணவு ஊட்டுதல்
,, 9-30 ,, -நல்ல காற்று, சூரிய வெளிச்சம் அளித்தல், தூங்க விடுதல்.
நண்பகல் 12-00 மணி-உணவு ஊட்டல்
மாலை 12-30 மணி-நல்ல காற்று வசதி அளித்தல், தூங்கவிடுதல்.
,, 3-00 ,, -உணவு ஊட்டல்.
,, 3-30 ,, -தூங்க விடுதல்.
,, 4-40 ,, -மீன் எண்ணெய், ஆரஞ்சுரசம். வெந்நீர் கொடுத்தல்.
,, 6-00 ,, -உணவு ஊட்டல்
,, 6-15 ,, -ஆடைகளைந்து விளையாட விடுதல்.
,, 7-30 ,, -தூங்க விடுதல்

இரவு 10-00 மணி-உணவு ஊட்டல்
,, 10-15 ,, -தூங்கவிடுதல்.

III

குழந்தையின் ஒழுங்கான வளர்ச்சி

6வது வாரத்தில்-புன்சிரிப்பு சிரித்தல்
8வது ,, -தாய்முகம் பார்த்தல் அசையும் பொருள்களிடமும், உருவங்களிடமும் பார்வையைச் செலுத்துதல்.
3வது மாதத்தில்-தலையை நிமிர்த்தல்
4வது மாதத்தில்-குப்புறக் கவிழ்தல்
6வது ,, -பிறந்தபோதிருந்த எடை இரட்டித்தல்-பல்முளைக்க ஆரம்பித்தல்.
8வது ,, -தவழ்தல்
9வது ,, -உட்காருதல்
10வது ,, -உதவியுடன் நிற்றல்
12வது ,, -நடக்க முயலுதல், பேச முயலுதல்
13வது ,, -நன்றாக நடத்தல், உச்சி மூடுதல்.
24வது ,, -பேசுதல்

IV

குழந்தை தூங்க வேண்டிய காலம்

1 முதல் 2 மாதம் வரை-21 மணி நேரம் தூங்க வேண்டும்

2	,,	3	,, ,,	20	,,
3	,,	5	,, ,,	19	,,
5	,,	7	,, ,,	18	,,
7	,,	12	,, ,,	16	,,
1 முதல்		5 வயது	,,	14	,,

அதிகக் குழந்தைகள் அதிகக் கவலைகள்; ஒரு குழந்தையும் இல்லை எனில், வாழ்வில் இன்பம் இல்லை.

—போவீ

* * *

காலை நாளைக் காட்டுவதுபோல், குழந்தைப்பருவம் மனிதனைக் காட்டுகிறது.

—மில்டன்

* * *

குற்றங் குறை கூறுவோரைவிட, மாதிரி காண்பிப்போரே குழந்தைகளுக்குத்தேவை.

* * *

தம்முடைய குழந்தைகளின் மழலைச் சொற்களைக் கேளாதோரே, குழலிசை மிக இனிது, யாழிசை மிக இனிது; என்று சொல்லுவர்.

—வள்ளுவர்

வரலாற்று ஓவியம்

வெள்ளிச் சிலை

[எஸ். எஸ். தென்னரசு]

பதினான்காம் நூற்றாண்டின் துவக்கம்!

பகலவன் மறைந்தான். பால் நிலவு பவனி வரத் தொடங்கியது. எங்கும் ஓரே அமைதி நிலவியது. மயானத்தைப் போல மவுனம் அரசோச்சிக் கொண்டிருந்த அந்த நடுநிசியில், காதல் கானம் இசைக்கும் வானம் பாடிகளாகச், சுதந்திரத் தேன்சிட்டுகளாக, இரண்டு உருவங்கள் மட்டும் ஊரோரத்தி லுள்ள ஏரிக்கரையில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தன.

"வீரமதி, கீர்த்தி பெற்ற தேவகட் வேந்தன் இராமதேவனின் படை, கில்ஜியின் படையோடு தொடர்ந்து மூன்று நாட்கள் போராடியும் வெற்றிபெறவில்லையென்பது வெட்கக்கேடான செய்தி; நாளைய போரில் எப்படியும் முடிவு காண வேண்டும். தேவகட் நாசமானாலும் சரி, நல்வாழ்வு கிடைத்தாலும் சரி. இன்றிரவு நான் வேவறியப் போகிறேன்" என்றான், மராட்டிய வீரன், கிருஷ்ணராவ்.

"வேவறியவா? ஒற்றனாகவா?" அதிர்ச்சி யோடு கேட்டாள் வீரமதி.

"ஏன் திடுக்கிடுகிறாய்? கண்ணே வீரமதி! கில்ஜி ஒரு வஞ்சகன். அவனை வஞ்சகத்தால் தான் வீழ்த்த வேண்டும்."

கோபத்தால் வீரமதியின் முகம் கொவ்வைப் பழமாயிற்று. "அன்பரே, வேவறிந்து வெற்றி கொள்ளுதல் வீரமாகாது என்பார்களே? மடிந்து போகலாமே யொழிய மராட்டியத்திற்கு மாசை ஏற்படுத்தலாமா?"

"வீரமதி! நீ விபரம் தெரியாதவள். இப்போது நடைபெறும் போர் மராட்டிய மண்டலத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் போர். மராட்டியர்களுக்கு வாழ்வா சாவா என்பதை முடிவுகட்டும் போர். ஆனால் நீ நினைக்கும் தர்மப் போரல்ல தகையணங்கே!"

நிலா மேகத்துள் மறைகிறது. நானிலத்தை இருள் கவ்வுகிறது.

* * *

அதே இரவு!

கில்ஜியின் பாசறை. இரும்புடை தரித்த வீரர்கள் இங்குமங்கும் உலாத்திய வண்ணமிருந்தனர். பாசறையின் உள்ளே அலாவுதீன் கில்ஜி ஏகாந்தமாக உட்கார்ந்து கொண்டு 'உக்கா' குடித்துக்கொண்டிருந்தான். சிந்தனைக் கோடுகள் சிலந்தி வலையைப் போல அவன் முகத்திலே பின்னிக்கிடந்தன. கில்ஜி திடீரென்று ஆசனத்தை விட்டு எழுந்து யாருடைய வருகையையோ எதிர்பார்த்தவனாக இங்குமங்கும் உலாத்த ஆரம்பித்தான். சற்று நேரத்தில் டடக், டடக், என்று குதிரையின் குளம்படி ஒலி கேட்டது. "சபாஷ்! சொன்னபடி கிருஷ்ணராவ் வந்துவிட்டான். இனி தேவகட் இந்தக் கில்ஜிக்குத்தான். சந்தேகமில்லை" என்று தானே கூறிக்கொண்டான் கில்ஜி, முகமலர்ச்சியோடு. அதற்குள் கிருஷ்ணராவ் திரையை விலக்கிக்கொண்டு கூடாரத்திற்குள் நுழைந்துவிட்டான்.

"மராட்டிய வீரனே வருக, வருக" என வரவேற்பளித்தான் கில்ஜி.

கில்ஜியின் வரவேற்பிலேயே கிறுகிறுத்துப் போன கிருஷ்ணராவ், "தங்களின் தயவிருந்தால் மராட்டிய வீரன் மராட்டிய மண்டலத்திற்கே மன்னனாக முடியும் ஷா இன் ஷா!" என்றான், பதவிப்போதை தலைக்கேறியவனாக.

"உதவிக்கேற்ற பதவியைக் கேளும் கிருஷ்ணராவ், தடையின்றித் தருகிறேன். மன்னர் பதவி என்பது........"

"மன்னிக்கவேண்டுகிறேன். மன்னர் பதவியில்லாவிட்டாலும் சுபேதார் பதவியாகிலும்...."

"தருவோம் வீரனே தருவோம்!"

இந்த நேரத்தில் இன்னொரு குதிரையொன்று பாசறையின் வாயிலில் வந்து நின்றது. காவலன் குதிரைக்கருகில் ஓடிவந்து, "நீயார்" என்று கேட்டான். அதற்குக் குதிரையில் வந்த இளைஞன், "சற்றுமுன் வந்த கிருஷ்ணராவின் அந்தரங்கச் செயலாளன் நான்" என்றான்.

"பெயர்?"

"ரண வீர சிங்."

மீண்டும் கூடாரத்தினுள்ளே!

"கிருஷ்ணராவ், உதவி செய்வதாக நீ வாக்குறுதி தந்தமைக்காக உடன்பட்டிருக்கிறேம், உமக்குச் சுபேதார் பதவி தருவதாக. நீ தவறினுல், தண்டனை எதாக இருக்குமென்பதை நீயே யூகித்துக்கொள்ள வேண்டும். ஆம், நினைவிருக்கட்டும்."

"சொன்னசொல் தவறும் சோற்றுத் துருத்தியல்ல இந்தக்கிருஷ்ணராவ். தங்களின் வரவிற்காகத் தேவகட் கோட்டை நாளை திறந்துவிடப்பட்டிருக்கும். குறிப்பிட்ட நேரத்தில் நாம் நமது வெற்றிக் கொடியை மேகத்தில் முத்தமிடச்செய்யலாம்."

"சபாஷ்! சரியான திட்டம்! சிந்தித்துச் செய்யப்பட்ட முன்னேற்பாடு!" என்றுகூறிக் கொண்டே இடி முழக்கமென வெற்றிச்சிரிப்புச் சிரித்தான் கில்ஜி. கில்ஜியின் அந்தச் சிரிப்பொலி பாசறையை அதிரச் செய்தது.

"விடை தாருங்கள் பிரபு."

"நினைவிருக்கட்டும் நாளைபிற்பகல்!"

"கட்டளை" என்று கூறிவிட்டுக் கிருஷ்ணராவ் பாசறையைவிட்டு வெளியே வந்தான். வெளியில் மராட்டிய உடையில் மற்ருெரு இளைஞன் நிற்பதைக் கண்டதும் கிருஷ்ணராவின் உடல் அச்சத்தால் சிலிர்த்தது. ஒரு வேளை இராமதேவர்தான் நமது துரோக வேலையை அறிந்து வர, ஆளனுப்பி யிருப்பாரோ என்று கருதினுன் கிருஷ்ணராவ்.

"யாரது?" என்று கேட்டான். "நான் மராட்டிய படைவீரன். தாங்கள் தனியே வந்ததைப் பார்த்தேன். தங்களுடைய பாதுகாப்புக்காகத் தங்களைத் தொடர்ந்தேன்" என்று கூறினுன், அந்த இளைஞன்.

குரல் பழக்கப்பட்ட ஒன்ருகக் காணப்பட்டதால், கிருஷ்ணராவ் அச்சம் நீங்கிக் குதிரையின் மேல் பாய்ந்தேறினுன்.

இரு குதிரைகளும் தேவகட் நோக்கிக் கிளம்பின. நகருக்கும் கில்ஜியின் பாசறைக்கும் இடையில் ஓர் இருண்ட காடு. கதிரொளிகூட புகமுடியாத அவ்வளவு அடர்த்தி நிறைந்தது அந்தக் காடு. மின்மினிப் பூச்சிகள்தான் அவர்களுக்குத் துணைபுரிந்தன. குதிரைகள் முன்னும் பின்னுமாக வந்து கொண்டிருக்கும் போது, திடீரென்று குதிரையை வேகமாகச் செலுத்திக் கிருஷ்ணராவின் குதிரையை வழி மறித்தான் இளைஞன் ரணவீரசிங்.

"ஏன் குதிரையை மறிக்கிருய்?"

"ஏனு? எந்தநாட்டின் உப்பைத் தின்று உன் உதிரத்தைப் பெருக்கிக் கொண்டாயோ, அந்த நாட்டைக் காட்டிக்கொடுக்கத் துணிந்த உன் துரோகத் தனத்திற்காக! எந்த நாட்டு மக்கள் உன்னை வீரன், விவேகி என்று புகழ்ந்தார்களோ, அந்த நாட்டு மக்களை மாற்ருனுக்கு மண்டியிடத் திட்டம் தீட்டிய உன் நன்றி கெட்ட செயலுக்காக! வஞ்சகனே வாய்ப்பேச்சு இனி வேண்டாம், வாள்வீச்சால் உரையாடலாம் வா!"

அந்த இருண்டகாடு இரத்தக் களறியாயிற்று. கண்களினின்று நெருப்புக் கனலும், வாள்களினின்று தீப்பொறியும் பறந்தன. கிருஷ்ணராவின் கைகள் சோர்ந்தன. அவன் கையிலிருந்த கேடயம் கீழே விழுந்தது. ரணவீர சிங்கின் வாள் அவனுடைய ரத்தத்தைச் சுவைபார்த்தது. மரணத்தின் மடியிலே, சாவின் சந்நிதானத்திலே ஊசலாடிக் கொண்டிருக்கும் போதுதான், கிருஷ்ணராவ் தன் தவற்றை உணர்ந்து பேசினுன். "மராட்டிய மாவீரனே, என்னை மன்னித்துவிடு. என்னுட்டை-என்னைப் பெற்று வளர்த்த பொன்னுட்டை-மங்காப் புகழ்பெற்ற மராட்டியத் தரணியை-மண்மேடாக்கவிருந்தேன். நீ யில்லாதுபோனுல் எம்முன்னேர்களின் மகிமை கொடிப்பொழுதில் மறைந்திருக்கும். தரணி யாளவேண்டுமென்ற சபலத்தால் தவறிவிட்டேன். அதற்குச் சரியான தண்டனை எனக்குக் கொடுத்துவிட்டாய். எனது கடைசி நேரத்தில் நீ எனக்கு ஒரு உதவி புரியவேண்டும். இன்று இரவு என் காதலியை விட்டுப்பிரியும்போது, வேவறியப் போவதாகச் சொல்லி வந்தேன். அவள் என் வருகைக்காக வழிமேல் விழிவைத்துப் பார்த்திருப்பாள். எனது உயிர் பிரியுமுன்-என் கண்கள் மூடுவதற்குள் அவளையாவது பார்த்துவிட்டுச் சாகிறேன்" என்று சோகக் குரலில் பேசினுன். விநாடிக்கு விநாடி அவன் குரல் தெம்பு இழந்துகொண்டிருந்தது.

"துரோகி! துடிக்கும் உன் உள்ளத்திற்கு இதோ கடைசிச் சாந்தி! தொலைந்துபோ!" என்று கூறித் தான் உடுத்தியிருந்த ஆண் உடையையும் முகமூடியையும் அகற்றினுள். அப்போதுதான் தன்னைத் தாக்கியவள் தன்னுடைய காதலிதான் என்பதை உணர்ந்தான் கிருஷ்ண

இலக்கியம்

காதற் காட்சிகள்

உணர்வோடு இயங்கும் உயிர்கள் அனைத்தும் கொண்டிருக்கும் வாழ்க்கையின் முக்கிய குறிக்கோள் இன்பம்! இன்பம்!! இன்பம்!!!

இன்பத்தைப் பெறவே அனைத்துயிரும் அரும்பாடுபடுகின்றன.

வாழ்க்கையில் இன்பம் ஒன்றினை மட்டுமே உயிரனங்கள் எதிர்ப்படுவதில்லை. இன்பம், துன்பம் ஆகிய இரண்டும், தனித்தனியாகவோ அடுத்தடுத்தோ, மாறி மாறியோ, இணைந்தோ எதிர்ப்படுகின்றன.

துன்பம் ஏற்படும்போது வருந்துதலும், இன்பம் ஏற்படும் போது மகிழ்தலும் உயிரின் இயற்கையாக இருந்து வருகின்றன.

துன்பத்திலின்றும் தப்பித்துக் கொள்ள முயலுதலும், இன்பத்தை அடைவதற்கு முயலுதலும் உயிரின் பழக்கமான முயற்சியாகவும் இருந்து வருகிறது.

எதிர்ப்படும் துன்பத்தைத் தடுத்து நிறுத்தவும், இன்பத்தைப் பெருக்கி வளர்க்கவும் ஆற்றல் படைத்த உயிரினம், மக்களினமேயாகும்; இயற்கை நிகழ்ச்சிகளைத் தம் விருப்பம்போல் - தம் முயற்சியால் ஒழுங்குபடுத்தி நிறுத்தும் பண்பு, மாந்தன் ஒருவனிடம் மட்டுமே காணப்படும் அரும் பண்பாகும். எனவேதான், ஒழுங்குபடுத்தும் பண்பாகிய ஒழுக்கம், மக்களினம் ஒன்றுக்கு மட்டுமே உரித்தானதொரு பண்பு ஆகையால், ஒழுக்கத்தை "**மக்கள் பன்பு**" என்று வரையறுத்துச் சிறப்பித்துக் கூறினார், உலகம் போற்றும் பேராசிரியரான வள்ளுவனார்

வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்கள் பலவற்றையும் களைந்தும்-தவிர்த்தும்-மறந்தும் வாழக் கற்றுக் கொண்ட மக்களினம், இன்பத்தைப் பெறுவதற்குப் பல்வேறு வாயில்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. பெறும் இன்பம், அளவிலும், வகையிலும், துறைக்குத் துறை வேறுபடுகின்றது. மக்கள் இன்பம் பெறும் துறைகளில், எந்தத்துறை, ஈடும் எடுப்பும் அற்ற—நிறைந்த இன்பத்தைத் தருகின்றன என்று ஆராய்ந்து பார்த்தால், **காதல் துறை** என்பது கண்கூடாகும்.

கண்ணுக்கு, காதுக்கு, மூக்குக்கு, நாக்குக்கு, உடலுக்கு ஒரே பொழுதில் நிறைந்த இன்பத்தை அளிக்கவல்ல துறை காதல் துறையேயாகும்.

ஆடும் மயில் கண்ணுக்கு மட்டுமே இன்பம் அளிக்கும்; அதனால் மற்றப் பொறிகளுக்குப் பயனில்லை. பாடும் குயில், காதுக்கு மட்டுமே இன்பம் பயக்கும்; பிற பொறிகள் இன்பம் பெறா. முக்கியமாக நாக்குக்கும், சில பொழுது சிறிதளவு மூக்குக்கும் இன்பம் பயக்கும் சுவையுள்ள உணவு; கண், காது, உடல் அதனால் எந்த இன்பத்தையும் அடையா. முல்லை, நுகரும்போது மூக்குக்கும், தொடும்போது உடலுக்கும் இன்பம் தரும்; மற்றப் பொறிகளுக்கு எந்தப்பயனும் இல்லை. தென்றல் காற்று உடலில் படும்போது இன்பம் சுரக்கும்; வேறு எந்த வகை இன்பமும் அதனால் ஏற்படாது.

ராவ். "வீரமதி, வீரமதி! நீயா இப்படித் துணிந்துவிட்டாய்! இரக்கமற்றவளே! சண்டாளி!" என்று கதறினான். வேதனை தாளாமல் அவன் உயிர் பிரிந்தது. குதிரையிலிருந்து சாய்ந்தான்.

வீரமதி உணர்வற்ற சிலையாக நின்றாள். அவளுடைய கண்கள் கண்ணீர்க் குளமாகிக் கருவிழிகள் அதில் நீழ்ந்தின. அவளையறியாமலே அவளது கரம் இடுப்பிலிருந்த பிச்சுவாவைத் தடவி எடுத்தது.

ஆ!-ஆம் அவள் தற்கொலை செய்து கொண்டாள்! இரண்டு குதிரைகளும கனைத்துக் கொண்டன. துரோகியின் ரத்தமும், தியாகியின் ரத்தமும் ஒன்று கலந்தன. அப்பேர்ப்பட்ட வீரவனிதையின் சிலைதான் அதோ கம்பீரமாக நின்று கொண்டிருக்கும் வெள்ளிச்சிலை!

ஆனால், ஆண் பெண்ணோடும், பெண் ஆணோடும் காதலன்பால் சேரும் போது, கண், காது, மூக்கு, நாக்கு, உடல் ஆகிய ஐந்து பொறிகளும் நிறைந்த இன்பத்தைப் பெறுகின்றன. அழகைக் காணும் போது இன்பம்; வளமான உடலைத் தழுவும்போது இன்பம்; புகழ்ந்தும் பாராட்டியும், சூழ்நிலை நிகழ்ச்சிகளைக் கிளர்ந்தும் இனிய சொற்களால் கூறும்போது இன்பம்; இதழைச் சுவைக்கும்போது இன்பம்! எல்லாம் இன்பம் மயம்! இக்காரணங்கள் பற்றி தான், "கண்டு கேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும், ஒண்டொடியாள் கண்ணேயுள" என்று வள்ளுவர் அழகுபடத் தெளிவுபடக் கூறினர்.

இன்பத்திலெல்லாம் சிறந்த இன்பமாகிய காதலின்பத்தை அடைவதற்கு ஏதுவான காதலொழுக்கம், எப்படியெப்படி யெல்லாம் சிறந்து விளங்கிற்று-எப்படி எப்படி யெல்லாம் சிறந்து விளங்க வேண்டும் என்பதைச் சங்க காலத் தமிழ்ப் புலவர்கள், இராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, அழகுபடவும், தெளிவுபடவும் கூறியுள்ளார்கள்.

தமிழ்ப்புலவர்கள் வகுத்துக் கூறிய காதலொழுக்கம், தமிழகத்தின் அந்தக் காலத்துக்கு மட்டும் பொருந்துவதொன்றாக அமையாமல், தொடர்ந்து வரும் பல்வேறு காலத்திற்கும், உலகிலுள்ள பல்வேறு நாட்டுக்கும் பெரும்பாலானவகையில் பொருந்தி வருவதாகவே சிறந்து விளங்குவதைக் காணலாம்.

ஆணும் பெண்ணும் அவரவர் மட்டுமே உணர்வதன்றி, இன்னதென்று திட்டவட்டமாக விளக்கிக் காட்ட இயலாத உள்ளச் சிறப்புகளை அடிப்படையாகக் கொண்டு எழுவதால், காதல் துறைபற்றிய முயற்சிகளை அகம் என்றும், பிறமுயற்சிகள், இன்னதென்று விளக்கிக் காட்டும் தன்மை வாய்ந்தனவாய்ப் புறச்சிறப்புகளை அடிப்படையாகக் கொண்டு எழுவதால், அவைகளைப் புறம் என்றும் பாகுபடுத்திக் கூறினர்கள், பண்டையத்தமிழ்ப் பெரும் புலவர்கள்.

ஒரு தாயைப் பார்த்துப் பருவமடையாத மங்கை ஒருத்தி கேட்டாளாம், "காதல், காதல் என்கிறார்களே........! காதல் என்றால் என்ன, அம்மா!" என்று. தாய்க்கு எப்படி விளக்கிக் காட்டுவது என்று புரியவில்லை. "எல்லாம் மணம் ஆன பிறகு தெரியும்" என்று சிரித்துக் கொண்டே போய்விட்டாளாம்! பிறகு ஆண்டுகள் சில கழிந்தன. மங்கை மணவாழ்க்கைப்பட்டாள். ஒருநாள் ஓய்ந்து உட்கார்ந்திருக்கும் போது, தாய், மகளைப் பார்த்துக் கேட்டாளாம், "காதல் என்றால் என்ன என்று அன்று ஒருநாள் கேட்டாயே........! இப்போழுது என்ன என்று சொல்லுவாயா?" என்று. மகள், முன்பு தாய் செய்ததைப் போலவே சிரித்துக் கொண்டே போய்விட்டாளாம். தாயாலும் மகளாலும் அவ்வளவுதான் விளக்கிக் காட்ட முடிந்ததே யொழிய, திட்ட வட்டமாகத்தெரிவிக்க முடியவில்லை. பிற அரசியல், பொருளியல், கலையியல், சமூகவியல், அறிவியல், உலகவியல் பற்றிய நிகழ்ச்சிகளைத் திட்டவட்டமாக விளக்கிக் காட்டிவிட முடிகிறது. ஆனால் காதலியலை மட்டும் அவ்வளவு எளிதாகக் காட்டிவிட முடிவதில்லை. எனவேதான், காதலியலை அகம் என்றும், பிற இயல்களை எல்லாம் புறம் என்றும் பகுத்தனர். இத்தகையச் சீரிய பாகுபாடு தமிழ்மொழி ஒன்றைத்தவிர, வேறு எம்மொழியிலும், அனைத்துலகிலும் இவ்வளவு சிறப்பாக விளக்கப்படவேயில்லை. தமிழர் நாகரிகத்தின் சிறப்புக்கும், மேன்மைக்கும் அகத்துறை பற்றிய செய்திகள் சீரிய எடுத்துக்காட்டுகளாகும்.

காதல் நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூற வந்த தமிழ்ப்பெரும்புலவர்கள், குறிப்பிட்ட ஒருவன், ஒருத்தியினுடைய காதல் ஒழுக்கத்தை எடுத்துக்கொண்டு, நிகழ்ந்தவாறு மட்டுமே கூறி, அந்த அளவோடு நின்றுவிடும் பண்பினைக் கொள்ளவில்லை. எந்தத் தனிப்பட்ட ஒருவனையும், ஒருத்தியையும் தங்கள் காதல் ஓவியத்திற்கு எடுத்துக் கொள்வதேயில்லை.

அவர்கள் ஆண்-பெண் காதல் ஒழுக்கத்திலே நிகழும் பல்வேறு திறங்களையும், சிறப்புகளையும் எடுத்துக்கொண்டு ஆராய்ந்தார்கள். அவைகளில் நல்லன எவை எவை என்று கண்டார்கள்! அவைகளை எப்படிச் சொன்னால் இனியனவாகும் என்ற அறிந்தார்கள். அவற்றோடு எவை எவைகளைக் கூடச் சேர்த்தால், காதல் ஒழுக்கம், குற்றம் குறையற்ற-சிறந்த-மேம்பாடுற்ற ஒன்றாக விளங்கக்கூடும் என்று ஆராய்ந்தார்கள்; அவற்றைக் கற்பனைசெய்து கொண்டார்கள். நல்லன-இனியன-இல்லன

(இருக்கவேண்டியன) ஆகியவற்றை எந்த அளவிலே குழைத்துத் தீட்டினால், காதலோவியம், எழிலோடு, பயன் விளைவித்து, இன்பமூட்டும் என்று கண்டறிந்து, செய்யுட்கள் இயற்றினர். அந்த வகையில், தமிழ்ப் பெரும்புலவர்களின் உள்ளத்தில் ஊறி எழுந்த இலக்கியங்கள்தாம், அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகப்பொருள், கோவை முதலாயினவையாகும்.

காதல் ஒழுக்கங்களைப் பொதுப்படையாக ஓரிடத்தில் குவித்துப், பெரும்போக்காகத் தொகுத்துப் பார்க்கும்போது, அவற்றை ஐந்து பெரும் பிரிவுகளில் அடக்கலாம் என்று கண்டார்கள். ஆணும் பெண்ணும் அன்புடன் ஆரத்தழுவி சேர்தல் ஒன்று; அவர்கள் இருவரும் இல்லறம் நடத்தி இருத்தல் இரண்டு; இருவரும் ஒருவர் ஒருவரிடம் எதிர்பார்ப்பது நிகழாதபோது, சினந்து கொண்டு வெறுப்புடன் வாழ்தல் மூன்று; அவர்களிருவரும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து போதல் நான்கு; பிரிந்த நிலையில் ஒருவரை ஒருவர் நினைந்து வருந்துதல் ஐந்து. இந்த ஒவ்வொரு பிரிவு ஒழுக்கமும் நிகழும் போது, அவற்றிற்கு ஆயத்தமாக நிகழும் காரண நிகழ்ச்சிகளையும் அந்தந்தப் பிரிவுகளிலேயே சேர்த்தார்கள். இந்த ஐவகைக் காதல் ஒழுக்கத்திற்கும் முறையே ஐந்து பெயரிட்டார்கள். அவைதாம் குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் என்பனவாகும்.

எந்த எந்த நிலப்பாங்கில் எந்த எந்த ஒழுக்கம் பெரும்பாலும் நடைபெறுகின்றன-நடைபெறுவது பொருத்தமாக இருக்கும் என்று கண்டறிந்து, ஒவ்வொரு ஒழுக்கத்திற்கும் ஒவ்வொரு வகை நிலத்தைப், பெரும் போக்காகப் பொருத்தமுடையதாக்கினார்கள். மலையும் மலைசார்ந்த இடமும் புணர்தல் ஒழுக்கத்திற்கான இடமாகும் என்றும், காடும் காடுசார்ந்த இடமும் இருத்தல் ஒழுக்கத்திற்கான இடமாகும் என்றும், வயலும் வயல்சார்ந்த இடமும் ஊடல் ஒழுக்கத்திற்கான இடமாகும் என்றும், பாலையும் பாலைசார்ந்த இடமும் பிரிதல் ஒழுக்கத்திற்கான இடமாகும் என்றும், கடலும் கடல் சார்ந்த இடமும் இரங்கல் ஒழுக்கத்திற்கான இடமாகும் என்றும் பொதுப்படையாகப் பொருத்தமாகப் பிரித்தார்கள். இக்காரணம் பற்றிதான் மலை, காடு, வயல், பாலை, கடல் ஆகியவற்றை யுணர்த்தும் பெயர்களான குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் என்ற சொற்கள், அர்தந்த நிலத்திலே நிகழ்தற்குரியதான ஒழுக்கத்திற்கு முறையே இடப்பட்டன.

தமிழ்ப்புலவர்கள் தாம் வரைய முனைந்த காதலோவியத்திற்கு, மேற்கண்டவாறு ஐவகை ஒழுக்க நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதோடு நின்றுவிடவில்லை. உலகியலைக் கூர்ந்து கவனித்தார்கள். அது போலவே எந்தெந்த காலத்திலே எந்தெந்த ஒழுக்கங்கள் மிகவாக நடைபெறுகின்றன என்பதையும், எந்தெந்தக் காலத்தில் எந்தெந்த ஒழுக்கம் நிகழ்ந்தால் பொருத்தமாக இருக்கும் என்பதையும் கண்டறிந்து, இரண்டு கருத்துக்களையும் ஒப்பிட்டுப் பெரும் போக்கான முடிவுக்கு வந்தார்கள். அப்படி வந்த முடிவுப்படி, குறிஞ்சி ஒழுக்கமான புணர்தலுக்குக் கூதிர்-முன்பனிக் காலத்தையும், முல்லை ஒழுக்கமான இருத்தலுக்குக் கார் காலத்தையும், மருதம் ஒழுக்கமான ஊடலுக்கு அறுவகைக் காலத்தையும், நெய்தல் ஒழுக்கமான இரங்கலுக்கு அறுவகைக் காலத்தையும், பாலை ஒழுக்கமான பிரிதலுக்கு வேனிற் காலத்தையும் பொருத்தமாக்கினார்கள்.

இந்த ஐவகை நிலங்களையும் தனித்தனியே ஆராய்ந்து பார்த்தபோது, அவைகளில் எந்தெந்த விலங்குகள் — பறவையினங்கள் — நீர் வாழ்வன—மர வகைகள் பெரும் வகையில் தனித்தனியே வேறு படுத்திக் காட்டுகின்றனவாக வாழ்கின்றன என்பதையும் குறித்துக் கொண்டார்கள். அந்தந்த நிலத்திற்குரிய விலங்குகள்-பறவைகள்-நீர்வாழ்வன - மரங்கள் இன்னின்ன என்று பொது இலக்கணம் வகுத்தார்கள்.

இப்படியாக ஒரு குறிப்பிட்ட காதலொழுக்கத்தைச் சிறப்பித்துக் கூறவந்த புலவர்கள், அதனோடு தொடர்புடைய காலம்-நிலப்பகுதி-அந்த நிலத்தோடு தொடர்புடைய விலங்குகள்-பறவைகள் - நீர் வாழ்வன-மரங்கள் ஆகியவற்றையும் எடுத்துக் கொண்டு அவற்றை எல்லாம் அழகுபட ஒழுங்குபடுத்திக் காதற்காட்சிகளைத் திறம்பட தீட்டிக் காட்டினர். அவர்கள் தீட்டிக் காட்டிய காட்சிகள், புனைந்துரையோடு பொலிவு பெற்று விளங்கின என்றாலும், உலகியல் இயற்கையினின்றும் வேறாகத்

கடற் குளித்தல்

★

கடற் குளித்தல் என்பது, பழம்பெருங் காலந் தொட்டு உலக வழக்கத்தில் இருந்துவரும் பழக்கமாகும்.

கடற்குளித்தல் பல்வேறு நாடுகளிலும் கையாளப் பட்டு வந்த பழக்கம் என்றாலும், அதில் பேரும் புகழும் எய்திச் சிறந்தோங்கி இருந்த நாடு தமிழகமாகும்.

தமிழகத்தின் தென்பாண்டித் துறைமுகத் தில், பண்டைக் காலத்திலிருந்தே முத்துக் குளித்தல், திறம்பட நடந்தேறி வருகிறது. தமிழகத்தின் முத்துக்கள் உலகோர் கண்ணை யும் கருத்தையும் ஈர்த்தன என்ற செய்தியை பல்வேறு நாடுகளின் இலக்கியங்களிலிருந்து இனிது அறியலாம்.

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து பிற நாடு களுக்கு ஏற்றுமதியான பொருள்களில், தென் கடல் முத்து முக்கியமான ஒன்றாகும் என் பதைப் பட்டினப்பாலை சிறப்புற எடுத்தியம்பு கிறது. "தென் கடல் முத்தும், குணகடற் றுகிரும்" என்ற அடியால் அது இனிது விளக் கப்படுகிறது. பாண்டியநாடு முத்துச் செல் வத்தை மிகவுடையது என்பதைக் குறிப்பிட வந்த ஔவையார் "பூழியர் கோன் தென்னாடு முத்துடைத்து" என்று புகழ்ந்துரைக்கிறார். கடற்குளித்தலைத் தமிழகம் மிகச் சிறப்பான முறையில் கொண்டிருந்தது என்பதற்கு இவை போன்றவைகள் சீரிய எடுத்துக்காட்டுகளாகும்.

கடற்குளித்தல் என்பது அவ்வளவு எளி தானவொரு செயலல்ல; உயிரைப் பயணம் வைத்துதான் ஒவ்வொரு தடவையும் ஒருவன் மூழ்கிப் பின் கரையேற வேண்டியிருக்கும். கடல்குளிப்போர் முன்னைய காலங்களிலெல் லாம், கயிற்றைக் கட்டிக்கொண்டு, மூச்சடக் கிக்கொண்டு, கடலில் இறங்குவார்கள். நீர் மட்டத்திற்கு மேல் படகிலாயினும், கட்டுமரத் திலாயினும் நின்று கொண்டிருக்கும் வேறு சிலர், கடற்குளிப்பவனின் இடுப்பில் பிணைக்

தோன்றுவண்ணம் அமைந்திருந்த தன்மை, போற்றிப் புகழ்வதற்குரியதாகும்.

புலவர்கள் உலகியல் நிகழ்ச்சியோடு, தங்கள் கற்பனைத் திறனையும் குழைத்ததால், காதற் காட்சிகள் மெருகு ஏறி விளங்கும் தன்மைய தாயின. உலகியல் நிகழ்ச்சிகளை உலகியல் வழக்கு என்றும், கற்பனை நிகழ்ச்சிகளை நாடக வழக்கு என்றும் கூறுவது பண்டைக்கால வழக் கம. உலகியல் வழக்கோடு நாடக வழக்கையும் சேர்த்துப் பாடல் இயற்றுவது, புலவர்களின் சிறப்பாகும் என்பதைத், தொல்காப்பியனார் "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும், பாடல்சான்ற புலனெறி வழக்கம்" என்று விளக்கிக் கூறினார்.

அப்படிப்பட்ட புலனெறி வழக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தீட்டப்பட்ட காதற்காட்சிகள்தாம், அகநானூற்றிலும் ஐங் குறுநூற்றிலும், நற்றிணையிலும், நல்ல குறுந் தொகையிலும், கலித்தொகையிலும் அறி வொளி வீசித் திகழ்கின்றன.

காதற் காட்சிகளில் காதலன், காதலியர் களைப் புலவன் முதலில் கற்பனை செய்து கொள்கிறான். காதலன் யார் என்றால், அவன் ஆணுக்குரிய எல்லா நலன்களும் ஒருங்கே அமையப்பெற்ற ஒருவன் என்று கூறி, அவனைத் தலைமகன் என்றே அழைப்பர். அதுபோலவே காதலி யார் என்றால், அவள் பெண்ணுக்குரிய எல்லா நலன்களும் ஒருங்கே அமையப் பெற்ற ஒருத்தி என்று கூறி, அவளைத் தலைமகள் என்றே அழைப்பர். புலவர்கள் பின்னணிச் சூழ்நிலைகளையெல்லாம் அமைத்துக்கொண்டு, காட்சிக் கேற்ப தலைமகன், தலைமகள், தலைமக ளின் தாய், தலைமகளின் வளர்ப்புத் தாய், தலை வனின் தோழனான பாங்கன், தலைமகளின் தோழியாகிய பாங்கி, ஊரார் ஆகியோரை நடிக்கவிட்டுக் காட்டுவார்கள். இவர்களில் ஒரு சிலர் மட்டுமோ அல்லது எல்லோருமோ நடிக்கச் செய்வர். இப்படிப்பட்ட அகத் துறைக் காட்சிகளைத் தமிழ்ப்புலவர்கள் படம் பிடித்ததுபோல், உலக மொழிகள் வேறு எதி லும், இத்துணைச் சிறப்பாகக் காணமுடியாது.

முதலில் கலித்தொகையிலே சில காட்சி களைக் காணலாம்.....வாருங்கள் போவோம்.....!

—இரா. நெ

(தொடரும்)

கப்பட்ட கயிற்றைப் பிடித்துக்கொண்டிருப்பார்கள். கடலில் மூழ்கியவன் வேலை முடிந்த போதும், மேலேறிவிடவேண்டிய அவசியம் ஏற்பட்ட போதும் கயிற்றை ஆட்டித் தன் எண்ணத்தை மேலிருப்பவர்க்குத் தெரிவிப்பான். மேலேயிருப்பவர்கள் கயிற்றைப் பிடித்து இழுத்துக் குளிப்பவனைக் கரையேற்றி விடுவார்கள். கடலிற்குள் இறங்கும் போது, தண்ணீரில் மூழ்க ஆளின் பளு போதுமானதாக இராதாகையால், அவனோடு சேர்த்துப் பெருங் கற்களையும் கட்டிவிடுவார்கள். குளிப்பவன் மேலேற நினைக்கும் போது, தன்னோடு பொருத்தியுள்ள கற்களை அவிழ்த்து விட்டு விட்டு, அதன் மூலம் தன்னை இலேசாக ஆக்கிக் கொள்வான். தண்ணீரின் அமுக்கும் ஆற்றல் அவனை மேலே கொண்டு போய்ச் சேர்க்கும். இந்த முறையைத்தான் வெற்றிகரமாக நடத்திக்கொண்டு வந்தது பண்டைய தமிழகம்.



உலோக உடையணி

இப்பொழுது முத்துக் குளித்தல், அறிவியல் கண்டு பிடித்துக் கொடுத்த சில கருவிகளின் துணையால், சற்று எளிதாக்கப்பட்டிருக்கிறது. இந்தக் காலத்தில் கடற்குளித்தல் பல்வேறு தேவைகளை முன்னிட்டுச் செய்ய வேண்டிய செயலாக இருக்கிறது. கப்பல்கள் உடைந்து மூழ்கினாலும், உடைந்த கப்பல்களின் பாகங்களை எடுக்க வேண்டி நேரிட்டாலும், கப்பல் போக்கு வரத்தில் கடலுக்கடியில் பாறைகள் இல்லாமலிருக்கின்றனவா என்று பார்க்க முயன்றாலும், கடலுக்குள் வாழும் நீர்வாழ்வன, மரம், செடி, கொடிகள் ஆகியவற்றை ஆராய்ந்து கண்டறிய வேண்டி நேரிட்டாலும் கடற்குளிக்க வேண்டி ஏற்படுகிறது.

நல்ல உடல் உரமும், உழைப்பினைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றலும் படைத்தவர்களே கடற்குளித்தலில் ஈடுபட முடியும். கடற்குளிப்பவனை எதிர் நோக்கி இருக்கும் அபாயங்கள் பலப்பல. அவன் சுறாவிற்கும், திமிங்கிலத்திற்கும், 'ஆக்டோபஸ்' என்னும் எட்டுக்கால் கடல் பிராணிக்கும் அகப்பட நேர்ந்தால், அவற்றினின்றும் தப்பித்துக் கொள்வது அவ்வளவு எளிதானதல்ல. இந்தக் காலத்தில், மூச்சுக் குழாயில்தான் கடற்குளிப்பவன் தன் உயிரைப் பதியவைத்துக் கொண்டிருக்கிறான். காற்றின் அமுக்கும் ஆற்றல் அதிகமாக உள்ள கடலுக்கடியிலிருந்து, அமுக்கும் ஆற்றல் குறைவாக உள்ள மேல் மட்டத்திற்கு விரைவாக மேலேறினாலும், உயிருக்குத் தீங்கிழைக்கும். இவ்வளவு நெருக்கடிகளையும் சமாளித்துத் தான் கடற்குளிக்க வேண்டியிருக்கிறது.

இந்நாட்களில், அதிக ஆழமில்லாத கடற் பகுதிகளில் குளிப்பவர்கள், நீர் - உள்நுழையாத உடுப்பு அணிந்து கொண்டு, தலையிலும், தோளிலும் உலோகக் கவசங்கள் போட்டு மூடிக் கொண்டு கடலில் இறங்குகிறார்கள். இடையே ரப்பர் துணி வைத்து இரு பக்கமும் அழுத்தமான துப்பட்டித் துணிகள் சேர்த்துத் தைக்கப்பட்ட கால்சட்டை, கைச் சட்டைகள் குளிப்பவனின் கால் முதல் கழுத்து வரையில் மூடிக்கொண்டிருக்கும். காலில் அழுத்தமான தோலினாலான பூட்ஸ்கள் இருக்கும். அவற்றின் அடிப்பாகத்தில் சுமார் இருபது பவுண்டு எடையுள்ள மரக் கட்டைகள் ஒட்டப்பட்டிருக்கும். இந்தக் கனமான பூட்ஸ்கள் தண்ணீரில் மூழ்கும்போது அவனை நேராக நிற்க உதவி புரியும். இதைத் தவிர சுமார் எண்பது பவுண்டு எடையுள்ள இரண்டு ஈயக்குண்டுகள் மார்புப் பக்கமும், முதுகுப் பக்கமும் வைத்துக் கட்டப்பட்டிருக்கும். சில சமயங்களில் ஈயத்தினாலான பெல்ட் அணிந்திருப்பான். தண்ணீரில் கண்டபடி ஆட்டங் கொடுக்காமல் இருக்க இவைகள் தேவைப்படுகின்றன. கடற்குளிப்பவனின் உடையில் மிக முக்கியப் பகுதி தலைக் கவசமேயாகும். அது செம்பினாலானதாக இருக்கும். அதில் கெட்டியான கண்ணாடியில் ஆக்கப்பட்ட ஜன்னல் ஒன்று பொருத்தப்பட்

டிருக்கும். கண்ணாடி உடையாதபடி இரும்புக் கம்பிகள் பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருக்கும் அந்தக் கவசத்தில் காற்றை உள்ளே விடுவதும், வெளியே வாங்குவதுமான வழிகள் பொருத்தப்பட்ட இரண்டு குழாய்கள் இணைக்கப்பட்டிருக்கும். கருவிகளை எடுக்கவும், பிடிக்கவும், வேலை செய்யவும், கடலுக்கடியிலுள்ள பொருள்களை வாரவும் ஏற்ற முறையில் கைப்பிடிப்புகள் பொருத்தப்பட்ட உலோகக் கவசங்கள் கைகளை மூடிக்கொண்டிருக்கும். இப்படிப்பட்ட உடையினை முழுக்க மாட்டிக் கொண்ட பிறகு பார்த்தால் சிறு துளி கூட நீர் நுழைவதற்கு இடமிருக்காது.

கடலுக்கடியில் சென்று வேலை செய்யும் போது, அவனுக்குத் தேவையான காற்று இரண்டு விதமாகக் கொடுக்கப்படும். மேலிருந்து ரப்பர் குழாய் வழியாகக் காற்று 'பம்ப்' செய்யப்படும் முறை ஒன்று. மற்றொரு முறை தேவையான ரசாயனப் பொருள்களடங்கிய பெட்டியொன்று அவன் முதுகில் சேர்த்துக் கட்டிவிடப்படும். அவன் வெளியே விடும் காற்றிலுள்ள கரிக்காற்றை ரசாயனப்பொருள்கள் கிரகித்துக் கொண்டு நல்ல உயிர்க்காற்றை வெளியே விட, அந்த உயிர்க்காற்றை அவன் மீண்டும் நுகருவான். இப்படியாக அந்தக் காற்றே அவனுக்குப் போதுமானதாகத் திரும்பித் திரும்பி வந்து கொண்டிருக்கும். இத்தகைய கவசமும் உடுப்புகளும் பூண்டவர்கள் சிறிது ஆழம் வரையில்தான் சென்றுவேலை செய்ய முடியும். சுமார் 400 அடி ஆழத்தில் வேலை செய்யவேண்டுமானால், முழுவதும் எஃகு கவசத்தால் செய்யப்பட்ட உடுப்புகளை அணிந்து கொள்வார்கள்.

தலைக் கவசத்தில், நீர்க் குளிப்பவனுக்குத் தேவையான வேறு பல பொருள்களும் உட்பக்கத்தில் பொருத்தப்பட்டிருக்கும். எவ்வளவு காற்று உள்ளே இருக்கிறது, அதன் அமுக்கும் சக்தி என்ன என்பதைக் காட்டும் பொறி ஒன்று வைக்கப்பட்டிருக்கும். போதுமான உயிர்காற்றை உள்ளே வரவழைத்துக் கொள்ளவும், தடுத்து நிறுத்திக் கொள்ளவும் ஏற்ற வண்ணம் வழி அடைப்பு ஒன்று இருக்கும். அவனுடைய செய்தியை மேலே இருப்பவர்க்குத் தெரிவிக்க 'மைக்' ஒன்று இருக்கும். மேலேயிருந்து பேசுவோர் சொல்வதைக் கேட்க காதுகளில் கேட்கும்-குழாய்கள் மாட்டியிருப்பான். கைகளில் மிக்க வெளிச்சம் தரும் 'டார்ச்' விளக்குகள் சேர்க்கப்பட்டிருக்கும். சில சமயங்களில் மேலிருந்து தனியேயும் விளக்குகள் கட்டித் தொங்கவிடப்படும். தண்ணீருக்குள் இருக்கும் பொருள்களைப் படம்பிடிப்பதற்கேற்ற முறையில் 'காமிரா' ஒன்றும் கவசத்திற்குள் வைக்கப்பட்டிருக்கும்.

நீர்க்குளிப்பவனைச் சுற்றிலுமுள்ள எஃகுச் சுவரைப் போன்று இடைவெளிவிட்டு வேறு ஒரு எஃகுச் சுவரும் சுற்றிலும் இருக்கும். இந்த இரண்டு சுவர்களுக்கிடையில் தேவையான போது தண்ணீரை நிரம்ப விட்டுத் தன் பளுவை அதிகமாக்கிக் கொள்ளவும், தேவையில்லாதபோது உயிர்காற்றை உள்ளே புகச் செய்து, அதன் மூலம் தண்ணீரை வெளியே அனுப்பிவிட்டுத் தன் எடையைக் குறைத்துக் கொள்ளவும் நீர்க்குளிப்பவனுக்கு வசதிகளிருக்கின்றன.

இப்படியாக கடலுக்கடியில் செல்ல என்ன என்ன முயற்சிகளைச் செய்ய வேண்டுமோ அவ்வளவையும், மேலை நாட்டார் அறிவியலின் உதவிகொண்டு செய்கிறார்கள்; அதனால் ஏற்படும் தொல்லைகளைப் போக்குவதற்கான வழிவகைகளையும் அன்றாடம் கண்டுபிடித்து வருகிறார்கள்.

வருங்காலத்தில் கடலுக்குள் கிடக்கும் செல்வங்களைத் திரட்டித் தங்கள் தங்கள் நாட்டை வளப்படுத்தும் முயற்சியிலே ஒவ்வொரு நாடும் ஈடுபடும் என்பது உறுதி. அப்பொழுது கடற்குளித்தலைச் சீரியதாகவும், திறமையதாகவும், எளிமையானதாகவும், ஏற்றமானதாகவும் ஒவ்வொரு நாடும் பெருக்கிக்கொண்டே போகும். திராவிடமும் நாளடைவில் தன் அறிவியல் அறிவைப் பெருக்கிக் கொண்டால், அதனைச் சூழ்ந்து கிடக்கும் முப்பெரும் கடலில் ஏராளமான வளத்தை எடுக்கலாம.

அறியாமை நிரம்பி, அலட்சியங் கொண்டு, அடிமைப்பட்டுக் கிடக்கும் திராவிடம் தன்னுடைய நிலவளத்தையே பயன்படுத்திக்கொள்ள முடியாத இந்நிலையில், கடல்வளத்தைப் பயன்படுத்தும் என்று எங்ஙனம் எதிர்பார்க்க இயலும்! திராவிடப் பெருங்குடி மக்களின் ஊக்கமும், உணர்ச்சியும் ஒன்றுபட்டால், இன்பத் திராவிடம் ஏற்றம் பெறும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை!

கண்டுபிடிப்பு

மனிதனது அறிவின் முயற்சியால் கண்டுபிடிக்கப்பட்ட வியப்புக்குரிய பொருள்கள் பலப்பல. அறிவை நம்பி வாழ்ந்த விஞ்ஞானிகள் உலகிற்குப் புரிந்த நன்மைகளையும், ஆண்டவனை நம்பி வாழ்ந்த மதவாதிகள் புரிந்த நன்மைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் பதினாயிரத்தில்-இலட்சத்தில்-கோடியில் ஒருபங்கு நன்மையைக்கூட மதவாதிகள் செய்ததில்லை என்பதைத் தெளிவாக அறியலாம். மதவாதிகள் கண்டுபிடித்த சடங்குகள்-அடையாளங்கள்-முறைகள் ஆகியவற்றைச் சிறிதும் ஏற்றுக் கொள்ளாமலே விஞ்ஞானிகள் வாழ்ந்து விடலாம்; ஆனால் விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புகளை அறவே ஒழித்து விட்டு மதவாதிகளால் வாழமுடிவதில்லை. இன்றைய முற்போக்கு உலகம் யாருக்கு நன்றி செலுத்த வேண்டுமென்றால், அறிவியல் அறிஞர்களுக்குத்தான்; சமயப் புரட்டர்களுக்கல்ல. இதோ சில கண்டுபிடிப்புகளின் பட்டியல்; அவற்றைக் கண்டுபிடித்த ஆண்டும், கண்டுபிடித்தவர்களின் பெயரும் வருமாறு:

1450 அசையும் அச்சுக்கள், கட்டன்பர்க் (ஜெர்மனி)

1608 தொலைநோக்கு ஆடி, லிப்பர்ஷிய் (டச்சு)

1643 பாரமானி, டோரிசெல்லி (இத்தாலி)

1657 பெண்டுலம் கடிகாரம், ஹியூஜென்ஸ் (டச்சு)

1709 தெர்மாமீட்டர், பாரன்ஹீட் (ஜெர்மனி)

1752 இடிதாங்கும் கம்பி, பிராங்க்லின் (அமெரிக்கா)

1765 நீராவிப்பொறி, வாட் (இங்கிலாந்து)

1783 பலூன், மான்ட் கோல்பியர் (பிரெஞ்சு)

1785 விசைத்தறி, கார்ட்ரைட் (இங்கிலாந்து)

1793 பருத்திக்கொட்டை பிரிக்கும் பொறி, விட்னி (அமெரிக்கா)

1798 துணிவெளுக்கும் தூள், டென்னண்ட் (இங்கிலாந்து)

1800 மின்சார பாட்டரி, வோல்டா (இத்தாலி)

1807 நீராவிப்படகு, புல்டன் (அமெரிக்கா)

1815 சுரங்கப் பாதுகாப்பு விளக்கு, டேவி (இங்கிலாந்து)

1816 ஸ்டெதாஸ்கோப், லானெக் (பிரான்ஸ்)

1820 கிளாவனோமீட்டர் (மின்சாரம் அளக்கும் கருவி), ஸ்வீஜ்ஜர் (ஜெர்மனி)

1824 எலக்ட்ரோ மாக்னட், ஸ்டர்ஜியான் (இங்கிலாந்து)

1829 நீராவிப் புகைவண்டி, ஸ்டீபென்சன் (இங்கிலாந்து)

1831 டைனமோ-மின்சாரப் பொறி, பாரடே (இங்கிலாந்து)

1832 தந்தி, மோர்ஸ் (அமெரிக்கா)

1835 ரிவால்வார், கோல்ட் (அமெரிக்கா)

1835 ஸ்குரு புரொபெல்லர், எரிக்ஸன் (ஸ்வீடன்)

1839 நிழற்படம் பிடித்தல், லூயி டாக்கர்ரே (பிரான்ஸ்)

1839 பற்றவைக்கப்பட்ட ரப்பர், குட்யியர் (அமெரிக்கா)

1842 ஈருருளி (சைக்கிள்), மாக்மிலான் (ஸ்காட்லாந்து)

1845 சிமென்ட், ஆஸ்பிடின் (இங்கிலாந்து)

1846 தையல் பொறி, எலியாஸ்வோவே (அமெரிக்கா)

1847 குளோராலாம், சிம்சன் (இங்கிலாந்து)

1849 ஊக்கு, வால்டர் ஹண்ட் (அமெரிக்கா)

1851 இன்டக்ஷன் காயில், ரூம்கார்வ் (ஜெர்மனி)

1852 விசை பெருக்கி, ஓட்டிஸ் (அமெரிக்கா)

1855 காற்று விளக்கு (க்யாஸ் பர்னர்), பன்சன் (ஜெர்மனி)

1856 எஃகு, மெஸ்ஸெம்மர் (இங்கிலாந்து)

1858 கேபிள் கம்பி, பீல்டு (அமெரிக்கா)

1861 அசையும்படக்காட்சி (புரொஜெக்டர்) செல்லர்ஸ் (அமெரிக்கா)

1866 டைனமைட், நோபிள் (ஸ்வீடன்)

1868 புல்செதுக்கும் பொறி, ஹில்ஸ் (அமெரிக்கா)

1868 டைப் அடிக்கும் பொறி, ஷோலெஸ் (அமெரிக்கா)

1870 செல்லுலாயிட், ஹாவட் (அமெரிக்கா)

1876 டெலிபோன், பெல் (அமெரிக்கா)
1877 ஒலிபெருக்கி, பெர்லினர் (அமெரிக்கா)
1878 மின்சார விளக்கு, எடிசன் (அமெரிக்கா)
1879 பணம் எண்ணும் பொறி, ரிட்டி (அமெரிக்கா)
1880 லினோடைப், மெர்ஜென்தலர் (அமெரிக்கா)
1884 பௌடன் பேனா, வாட்டர்மென் (அமெரிக்கா)
1885 எக்ஸ் ரே, ரோயென்ட்ஜன் (ஜெர்மனி)
1885 மோட்டார் சைகள், டெய்ம்லர் (ஜெர்மனி)
1887 மின்சார மோட்டார், டெஸ்லா (அமெரிக்கா)
1887 கிராமபோன், பெர்லினர் (அமெரிக்கா)
1888 மோட்டார் டயர், டன்லப் (அமெரிக்கா)
1888 கைக்காமிரா, ஈஸ்ட்மென்-வால்கர் (அமெரிக்கா)
1892 வர்ண நிழற்படம், ஐவெஸ் (அமெரிக்கா)
1893 பிளாக் எடுத்தல், ஈவெஸ் (அமெரிக்கா)
1895 போட்டோ எலக்ட்ரிக் மின்கலம், எல்ஸ்டர்-ஜெய்டல் (ஜெர்மனி)
1896 ரேடியம், க்யூரி (பிரான்ஸ)
1896 கம்பில்லாத் தந்தி, ஜி. மார்கோனி (இத்தாலி)
1897 டீஸல் பொறி, டீஸல் (ஜெர்மனி)
1900 நீர்மூழ்கிக் கப்பல், ஹாலண்டு (அமெரிக்கா)
1903 ஆகாய விமானம், ரைட் சகோதரர்கள் (அமெரிக்கா)
1906 ரேடியோ வாக்கூம் டியூப், தெ பாரெஸ்ட் (அமெரிக்கா)
1909 ஹெலி காப்டர், பிரெகாட் (அமெரிக்கா)
1914 மிலிடரி டாங்க், ஸ்வின்டன் (இங்கிலாந்து)
1914 ஸ்டெயின்லெஸ் ஸ்டீல், பிரார்லி (இங்கிலாந்து)
1925 டெலிவிஷன், பாய்ர்டு (ஸ்காட்லாந்து)
1925 போட்டோ-தந்தி, பெல் லாப் (அமெரிக்கா)
1929 பென்சிலின், அலெக்ஸாண்டர் பிளெமிங் (இங்கிலாந்து)
1930 பிளாஸ்டிக், காரொதெர்ஸ் (அமெ)
1941 அணுகுண்டுசக்தி, பெர்மி (இத்தாலி)

கடல் ஆட்சி

—:oOo:—

குறிப்பிட்டக் கடலைத் தன் ஆதிக்கத்துக்கு உட்பட்டதாகக் கொண்டு, உரிமை கொண்டாடும் வழக்கம், இப்போதுள்ள வல்லரசுகளிடம் காணப்படுவது போன்று, பண்டைத் தமிழகத்துப் பேரரசுகளிடம் இருந்திருக்கின்றது.

இப்பொழுது அரபிக்கடல் என்று அழைக்கப்படும் மேலைக்கடலை, சேர அரசன் தன்னுடைய ஆதிக்கத்துக்கு உட்பட்டதாகக் கொண்டு, தன்னுடைய கப்பல்களைத் தவிர, வேற்று நாட்டின் கப்பல்கள் அக்கடலில் நுழையக் கூடாது என்று ஆணையிட்டிருந்தான் என்று தெரிய வருகின்றது.

மலையமான் திருமுடிக்காரி என்ற சிற்றரசனைப் பார்க்க மாறோக்கத்து நப்பசலையார் என்ற பெண்பாற் புலவர் ஒருவர் வந்தார். திருமுடிக்காரி கபிலர் என்ற பெரும் புலவரால் அதற்கு முன்பே பாராட்டிப் புகழப்பட்டவன். கபிலரால் பாராட்டப் பெற்ற ஒருவனைத் தான் பாடுவது எந்த வகையிலும் சிறப்புப் பெறாது என்பதை அறிந்திருந்தும், வறுமையின் கொடுமையாலேயேதான் தாம் பாடத்துணிந்ததாக, நப்பசலையார் தெரிவிக்கிறார். அப்பொழுது தம்முடைய போக்கை விளக்கிக் காட்ட ஒரு உவமை கூறுகிறார்.

சேர மன்னனின் மரக்கலத்தால் காவல் காக்கப்படும் மேலைக்கடலில், வேறொரு மரக்கலம் எப்படி நுழைய முடியாதோ அப்படியே கபிலன் பாடிய இடத்தில் தாம் உலவுவது ஆகாது என்ற கருத்தை வெளியிடுகிறார்.

சினமிகு தானை வானவன் குடகடற்
பொலந்தரு நாவாய் ஓட்டிய அவ்வழிப்
பிறகலஞ் செல்கலா தனையே மத்தை”
(புறம் 126)

இந்த உவமை கடலாட்சி முறை (Maritime power) பண்டை நாட்களில் இருந்த தன்மையை அறிவிக்கப் பெரிதும் பயன்படுவதாக இருக்கின்றது.

சிறு கதை

தந்திக்கம்பங்கள்

அந்த அனாதைச் சிறுவர் பள்ளிக்கூடத்திற்குள் பரமசிவம் பிள்ளை நுழைந்த பொழுது, ஒரு புத்தகத்தைப் பிடித்துக்கொண்டு நான்கு பையன்கள் சண்டையிடுவதைப் பார்த்தார்.

"ஏன் இப்படிச் சண்டை போட்டுக் கொள்ளுகிறீர்கள்? அந்தப் புத்தகம், என்ன, கற்கண்டா, மிட்டாயா?" என்று, பரமசிவம் அவர்களைச் சமாதானப்படுத்த முயன்றார்.

"இந்தக் கதைப் புத்தகத்தை என்னிடமிருந்து இவன் பிடுங்கிக்கொண்டான்" என்று ஒரு பையன் முறையிட்டான்.

"பொய், பொய்! என்னிடமிருந்ததைத்தான் இவன் எடுத்தான்" என்று மற்றொரு பையன் பதிலளித்தான்.

"நான்தான் முதலில் வைத்திருந்தேன். இவர்கள் இருவரும் எனக்குத் தெரியாமல் எடுத்துக்கொண்டார்கள். ஆனால் கண்டு பிடித்துக் கேட்டதும் சண்டையிட வருகிறார்கள்" என்று மூன்றாவது பையன் உறுமினான்.

முழுவிவரத்தையும் பரமசிவம் பிள்ளை கேட்டுக்கொண்டிருக்கும் பொழுது, பள்ளிக்கூடத்து ஆசிரியர் அருமைநாயகம் வந்தார்.

"இது மாதிரிச் சண்டைகள் அடிக்கடி உண்டாகின்றன. பள்ளிக்கூடத்தில் படிப்பதற்கானப் புத்தகங்களே மிகக்குறைவாயிருக்கின்றன. ஆனால் பல புத்தகங்களைப் படிக்க வேண்டுமென்று பையன்கள் ஆர்வமுள்ளவர்களாயிருக்கின்றனர். அதனால் ஒரு புத்தகத்தைக் கண்டால்கூட அதற்குச் சண்டையும், போட்டியும் வந்துவிடுகின்றன" என்று அருமைநாயகம் விளக்கினார்.

சரியான நூல் நிலையமின்றி இருக்கும் அந்தப் பள்ளிக்கூடத்தையும், படிக்கும் ஆர்வமிருந்தும் படிப்பதற்குப் புத்தகமில்லாமல் தவிக்கும் அனாதைச் சிறுவர்களையும் பார்த்தவுடன், பரமசிவம் பிள்ளைக்கு அவர்களிடத்தில் பரிதாப உணர்ச்சி உண்டானது.

இரண்டு நாட்கள் கழிந்தன, பரமசிவம் பிள்ளை சீமான் சிங்காரவேலு முதலியாரிடம் பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது அனாதைச் சிறுவர் பள்ளிக்கூடத்தைப் பற்றிய பேச்சு வந்தது. அங்கு தாம் கண்ட காட்சியையும், பையன்கள் படிக்கத் தகுந்த புத்தகங்கள் இல்லாத குறையைப் பற்றியும் பரமசிவம் சொன்னார்.

அதைக் கேட்டதும் சீமான் சிங்காரவேலருக்கும் பரிதாப உணர்ச்சி உண்டானது.

சிறிது நேரம் சீமான் யோசித்தார். புத்தகங்கள் சில வாங்கி, அந்தப் பள்ளிக்கூடத்துக்குக் கொடுப்பது நல்லது என்று அவருக்குப்பட்டது. இன்னும் சிறிது நேரம் யோசனை செய்தபொழுது, தன் வீட்டிலேயே, புழுதியடைந்து, கட்டுக்கட்டாகச் சிறுவர் நூல்கள் பல இருப்பது அவரது ஞாபகத்துக்கு வந்தது. அவருடைய குழந்தைகளுக்காக வாங்கிய புத்தகங்கள் அவை. அட்டைகூடப் பிரிக்கப்படாமல் கிடந்தன. ஆனால் எந்த மூலையில், எந்தப் பெட்டியில் கிடக்கிறதோ! கண்டு பிடித்து எடுப்பது மிகக் கஷ்டம் என அந்த எண்ணத்தைச் சிங்காரவேலர் கைவிட்டார்.

ஆனால் அனாதைச் சிறுவர்களைப் பற்றி அவர் மறந்துவிடவில்லை. அன்று மாலை கோயில் தர்மகர்த்தா புண்ணியகோடிச் செட்டியாரை அவர் பார்த்த பொழுது அனாதைப் பள்ளி மாணவர்கள் புத்தகங்கள் இல்லாமல் படும் அவதியைப் பற்றிச் சொன்னார்.

அதைக் கேட்டதும் புண்ணியகோடிச் செட்டியாருக்கும் பரிதாப உணர்ச்சி உண்டானது.

"இதற்கு ஏதாவது ஒரு வழி செய்ய வேண்டும். ஆனால் கோயில் கும்பாபிஷேகத்தில் நான் இப்பொழுது மும்முரமாயிருக்கிறேன். இன்னும் ஒரு மாதத்திற்கப்புறம் இதைப் பார்க்கலாம்" என்று புண்ணியகோடி சொன்னார்.

வேறு அலுவல்களிருந்ததால் பள்ளிக்கூடத்திற்காக உடனே புண்ணியகோடிச் செட்டியாரால் எதுவும் செய்ய முடியவில்லை. அதனால் அது அவரது கவனத்தில் இல்லாமற் போய்விட்டது என்று கூறிவிட முடியாது. ஏனென்றால் இரண்டு வாரங் கழித்து, நகர சபைத் தலைவர் வெங்கடசாமி நாயுடுவைப்

பார்த்து வேறு வேலைகள் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் பொழுது, புத்தகங்கள் இல்லாமல் அனாதைச் சிறுவர்கள் அவதிப்படு வதைப் பற்றிக்கூறினர்.

அதைக் கேட்டதும், நகர சபைத் தலைவர் நாயுடுவுக்கும் பரிதாப உணர்ச்சி உண்டானது.

நகர சபையிலிருந்து ஏதாவது உதவி செய்யலாமா என அவர் யோசித்தார். ஆனால் நகர சபையில் அதிகப் பணம் கிடையாது. போன வாரம் முதல் மந்திரி வந்தபொழுது அளித்த வரவேற்புக்கும், நடத்திய விருந்துக்குமே மறுபடியும் தீர்மானம் கொண்டு வந்து பணம் எடுக்கவேண்டியதாயிற்று. நகரசபையால் முடியாது என்று தெரிந்ததும், நாயுடு அத்துடன் விட்டுவிடவில்லை. அனாதைச் சிறுவர் பள்ளிக்குப் புத்தகங்கள் வாங்கிக் கொடுக்கும்படி பொதுமக்களை வேண்டி ஒரு அறிக்கை தயாரித்து, அதை அந்த ஊரிலிருந்து வெளிவரும் பத்திரிகைக்கு அனுப்பினர்.

அறிக்கை நல்ல வேளையில்தான் போய்ச்சேர்ந்தது. அப்பொழுதுதான் ஆசிரியர் ஆறுமுகம் என்ன எழுதுவதென்று தெரியாமல், சூடான விஷயமொன்றைத் தனது பழைய குறிப்பேட்டில் தேடிக்கொண்டிருந்தார். நகரசபைத் தலைவரின் அறிக்கையைப் படித்ததும், தன்னிடத்திலிருந்து துள்ளிக்குதித்தார், பேனமுனையைப் பேப்பரில் குத்தினர். வார்த்தைகள் பொல பொலவென உதிர்ந்தன. அருமையான கட்டுரை மலர்ந்தது. "அனாதைச் சிறுவர்கள்-புத்தகங்கள் தேவை-வெள்ளித் தோட்டாக்களை வீசுங்கள்" என்று தலைப்புக் கொடுத்தார். கட்டுரை முடிந்ததும் "அப்பாடா! இன்றைக்கு எப்படியோ வேலை முடிந்தது" என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு வீட்டுக்குப் போனர்.

ஒரு வாரங்கழித்து அருமைநாயகம் பள்ளிக்கூடத்தை நோக்கி வந்துகொண்டிருந்தார். பள்ளிக்கூடத்துத் தோட்டத்து அருகில் ஒரு குடியானவனும் ஒரு சிறு பெண்ணும் இவரை எதிர்பார்த்து நின்று கொண்டிருந்தார்கள். குடியானவன் கொஞ்சம் வயதானவன், வறுமையால் மிக வாடியிருந்தான். பக்கத்திலிருந்த சிறுமி நோய்வாய்ப்பட்டவளைப் போல முகம் வெளுத்து, உடல் இளைத்து இருந்தாள். அவள் கையில் துணி மூட்டை ஒன்று இருந்தது. அவர்களைப் பார்த்ததும், மற்றொரு அனாதைச் சிறுமியைச் சேர்க்க வந்திருக்கிறார்கள் என அருமைநாயகம் பயந்தார்.

"என்ன வேண்டும்?" என்று அதட்டிக் கேட்டார்.

"நீங்கதான் இந்தப் பள்ளிக்கூடத்து வாத்தியார் ஐயாவா?" என்று குடியானவன் வணக்கத்துடன் கேட்டான்.

அருமைநாயகத்தின் பயம் இன்னும் அதிகரித்தது. அந்தப் பெண்ணைப் பார்த்தாலே "முடியாது" என்று கூற மனமில்லை. குடியானவன் கேள்விக்கு "ஆமாம்" எனத் தலையசைத்தார்.

அவர்தான் வாத்தியார் என்று தெரிந்ததும், பின்னல் நின்று கொண்டிருந்த சிறுமி முன்னல் வந்தாள்.

"சொன்னல் கோபித்துக் கொள்ளாதே! இவளைச் சேர்த்துக் கொள்ள இந்தப் பள்ளிக்கூடத்தில் இடமில்லை" என்று அருமைநாயகம் சற்றுக் கண்டிப்பாகச் சொன்னர்.

"இந்தப் பெண்ணைச் சேர்க்க வரவில்லைங்க. இந்தப் புத்தகங்களைத் தரத்தான் வந்தோம்" என்றான் குடியானவன்.

சிறுமி தன் கையிலிருந்த மூட்டையை அவிழ்த்து, அதிலிருந்த சில பழைய புத்தகங்களை எடுத்து, அருமைநாயகத்திடம் கொடுத்தாள்.

"உங்க பள்ளிக்கூடத்து அனாதைப் பையன்களுக்கு புத்தகங்கள் வேணுமென்று சொன்னீங்களாம். இதெல்லாம் என் குடிசையில் இருந்ததுங்க. ரொம்ப பழசு, இருந்தாலும் படிக்க உதவுங்க பையன்களுக்கு" என்று குடியானவன் சொன்னன்.

புத்தகங்களை வாங்கிய அருமைநாயகம், எதையும் கேட்காமல் திகைத்து நின்ருர்.

"நான் போய் வர்ரேனுங்க" என்று குடியானவன் சிறுமியை அழைத்துக் கொண்டு கிளம்பினன்.

"இரு, இரு! உன் பேர் என்ன?" என்று அருமைநாயகம் கனிவுடன் கேட்டார்.

"ஏங்க கேக்கிறீங்க?"

"புத்தகங்கள் கொடுத்தவர்கள் பெயரைப் பத்திரிகையில் போட வேண்டும், அதற்குத்தான்."

"அது வேண்டியதில்லேங்க, நான் குடியான ஏழைங்க. எம்பேர் வர்ரணுங்கிற அவசியமில்

லிங்க" என்று சொல்லிவிட்டுக் குடியானவன் போனான். கிழவன் போன திக்கைப் பார்த்த படி அருமைநாயகம் நின்றார்.

அவர் இதைக் கொஞ்சங்கூட எதிர்பார்க்க வில்லை. அனாதைச் சிறுவர்கள் படிக்கப்புத்தகங் கள் தேவை என்றதும், சீமான் சிங்காரவேலர், செல்வந்தர் புண்ணியகோடி, நகரசபைத் தலைவர் வேங்கடசாமி நாயுடு போன்று வசதி யுள்ளவர்கள் உடனே முன் வந்து உதவி செய் வார்கள் என்று எதிர்பார்த்தார். சரியான உதவி செய்யவும் அவர்களால்தான் முடியும். ஆனால் அந்தப் "பெரிய" மனிதர்களெல்லாம் ஒருவர் மற்றொருவருக்குச் செய்தி சொல்வதில் இருந்தார்களே யொழிய, தானாக முன் வந்து யாரும் எதுவும் கொடுக்கவில்லை. ஆனால் உதவி மிகச் சிறிய அளவில்தான் என்றாலும் உண் மையான உதவி, எதிர்பாராத இடத்திலிருந்து வந்தது. ஊர்ப் பெரிய மனிதர்கள் பரிதாப உணர்ச்சி காட்டுவதுடன் நின்றுவிட்டார்கள். ஆனால் ஊர் பேர் தெரியாத ஓர் ஏழைக் குடி யானவன்தான் தன்னாலான உதவியைச் செய்தான்.

இவற்றை யெல்லாம் நினைத்த வண்ணம் அருமைநாயகம் திரும்பிப்போகும் பொழுது பள்ளிக்கூடத்திற்கு அருகில் நின்ற ஒரு தந்திக் கம்பத்தின் மீது மோதிக்கொண்டார். நெற் றியைத் தடவிக் கொண்டு அந்தக் கம்பத்தின் மீது சாய்ந்து நின்றார்.

தந்திக் கம்பம்! வேதனை, மகிழ்ச்சி, வெற்றி, தோல்வி, இன்ப துன்பங்கள் இவற்றைத்தரும் பலவகைச் செய்திகள் தந்தியின் மூலம் அனுப் பப்படுகின்றன. ஆனால் அவற்றை யெல்லாம் எந்தக் கவலையுமின்றி, தந்திக் கம்பங்கள் தாங்கி அனுப்பிக் கொண்டே இருக்கின்றன. தந்தி அடிக்கிற இடத்தில் செய்தி என்ன என்று தெரியும், தந்தி சேர்கிற இடத்திலும் செய்தி புரிகிறது, மத்தியிலிருக்கிற தந்திக் கம்பங்களுக்குத்தான் செய்திபற்றி உணர்வு கிடையாது.

அதைப் போல புத்தகங்கள் தேவை என்று அனாதைச் சிறுவர் பள்ளியிலிருந்து தந்தி அனுப்பப்பட்டது. அது ஏழைக் குடியான வனுக்குத்தான் கிடைத்தது. மத்தியிலிருந்த பரமசிவம் பிள்ளை, சீமான் சிங்காரவேலர், தர்மகர்த்தா புண்ணியகோடி, நகரசபைத் தலைவர் நாயுடு, ஆசிரியர் ஆறுமுகம், எல்லோ ரும் தந்திக் கம்பங்களைப் போல செய்தியை அனுப்புவதற்காகவே நின்றனர்.

ஏழையின் குரல் பலர் காதிலே விழலாம், ஆனால் அதை மற்றொரு ஏழையால்தான் புரிந்து கொள்ள முடிகிறது.

[போலந்து நாட்டுக் கதையைத் தழுவி எழுதப்பட்டது.]

இரா. செழியன் எம். ஏ.

நோய்க்குத் தக்க மருந்து

ஆலிவர் கோல்ட்ஸ்மித் என்ற ஆங்கிலக் கவி 16-ம் நூற்றாண்டில் (1728—74) வாழ்ந்தவர். அவர் சிறிது காலம் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து படித்துக்கொண்டு இருந் தார். அவருடைய தயாளகுணத்தைக் கேள்விப்பட்ட ஒரு பெண், தன் கணவன் நோய்வாய்ப் பட்டிருப்பதாகவும், அதை வந்து கவனித்துத் தக்க மருந்து எழுதித் தரும்படியும் கேட்டுக் கொண்டாள். கடிதம் கிடைத்ததும் கோல்ட்ஸ்மித் விரைந்து சென்று, நோயாளியைப் பார்த்தார். அவன் மிகவும் பலவீனமான நிலையில் இருந்தான். நோயாளியைப் பரிசோதனை செய்து விட்டு, தாம் வீட்டுக்குப் போய் மருந்து கொடுத்து அனுப்புவதாகக் கோல்ட்ஸ்மித் திரும்பினார்.

சிறிது நேரம் கழித்து, வேலையாள் ஒருவன் மருந்துப் பெட்டியைக் கொண்டுவந்து கொடுத்தான். நோயாளியின் மனைவி அதைப் பிரித்தாள். உள்ளே பத்து ரூபாய் பொரு மானமுள்ள நோட்டு இருந்தது! அத்துடன் "சரியான உணவு இல்லாமல், உன் கணவன் நோயாளியாயிருக்கிறான். இத்துடன் அனுப்பியிருக்கும் மருந்தை உபயோகப்படுத் துங்கள். நோய் சீக்கிரம் குணமாகிவிடும்" என்ற டாக்டர் குறிப்பு இருந்தது!



யானை வளம்

யானைகள் திராவிடத்தின் அரும் பெரும் சொத்தாகும். "வேழ முடைத்து மலைநாடு" என்று சேர நாட்டைப் பற்றி ஔவையார் குறிப்பிட்டார்.



திராவிடத்தில் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 200 யானைகள் பிடிக்கப் படுகின்றன. சென்ற ஆண்டில் மட்டும் 103 யானைகள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. அமெரிக்காவுக்கு 34; ஜெர்மனிக்கு 28; இத்தாலிக்கு 8; ஹாலந்துக்கு 7; பெல்ஜியத்திற்கு 7; ஜப்பானுக்கு 7; இங்கிலாந்துக்கு 3; பிரேசிலுக்கு 2; சீனாவுக்கு 1; மொம் பாஸாவுக்கு (கி. ஆப்ரிக்கா) 4. இவற்றைத் தவிர, பண்டித நேரு, ஜப்பான், சீனா, துருக்கி, அமெரிக்கா ஆகிய நாடுகளின் குழந்தைகளுக்கு இரண்டு இரண்டு யானைக் குட்டிகளை நன்கொடையாக வழங்கியுள்ளார். விலங்குநூல் வல்லுநர்களின் கூற்றுப்படி, திராவிடத்தின் யானைகள், ஆப்ரிக்கா யானைகளைவிட பழக்குவதற்கு ஏற்றன; மிக்க அறிவுடையனவாகும். எனவேதான், திராவிடத்தின் யானைகளைப் பிறநாட்டுச் சர்க்கஸ்களுக்கும், விலங்குக் காட்சிசாலைகளுக்கும் பெரிதும் விரும்புகின்றனர். யானைகளும், யானைகளின் தந்தங்களும், பெரும் பணம் ஈட்டித் தரும் திராவிடத்தின் சிறப்புச் சொத்தாகும்.

★

ஆசிரியர்—ஆகவே வருந்துகிறார்



மங்களூரில் நடந்தேறிய சென்னை அரசுக் கல்வி மகாநாட்டில், தலைமை தாங்கிப் பேருரை நிகழ்த்திய தோழர் குருவில்லா ஜேகப் அவர்கள், "பல் வேறு வெளி நாடுகளில் உள்ளவர்கள் ஒரே ஒரு மொழி பயில, நம்முடைய நாட்டுச் சிறுவர்-சிறுமியர் மூன்று மொழிகளில் கல்வி பயில வேண்டியிருக்கிறதே என்பதை நினைந்து, நான் அடிக்கடி வருத்தப்படுவதுண்டு" என்று உள்ளம் உருகி வருந்திக் கூறியுள்ளார். அவர் சென்னைக் கிருஸ்தவ உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியர், நமது நாட்டுப் பிள்ளைகள் எவ்வளவு மொழிகளைக் கற்றுக் கொள்ள வேண்டும், எப்படிக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை நன்கு அறியக்கூடிய அறிவும், ஆற்றலும் படைத்தவர். தன் சூழ்நிலையை அறியவும், அதனோடு தொடர்பு கொள்ளவும் தாய்மொழி தமிழ் இருக்கிறது.; உலகச் சூழ்நிலையை அறியவும் அதனோடு தொடர்பு கொள்ளவும் ஆங்கிலம் இருக்கிறது. இந்த நாட்டிற்கு இந்த இரண்டும் போதும். இதைத் தோழர் குருவில்லா ஜேகப் உணருகிறார், அவர் ஆசிரியர் ஆனதால். ஆனால் இந்திய தேசிய வெறி-இந்தி மொழி வெறி-காங்கிரஸ் வெறி பிடித்த ஆளவந்தார்கள் எப்படி உணர்வார்கள்? அவர்கள் 'ஆளவந்தார்கள்'தானே!

★

அருளா? அசந்தர்ப்பமா?

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த இராசிபுரத்தில், பெருமாள் கோவில் தேர் ஏறி 12 வயதுப் பையன் ஒருவன் மாண்டானாம்.

'அசந்தர்ப்பத்தால்' பையன் மாண்டான் என்று பத்திரிகைகள் செய்தி தெரிவிக்கின்றன. அந்தப் பையன் தேர்க் காலில் அகப்படுவது மாதிரி இருந்து, சிறிது தப்பிக்க வழியேற்பட்டிருந்தால், அப்பொழுது பையன் 'ஆண்டவன் அருளால்' தப்பிப் பிழைத்தான் என்று அதே பத்திரிகைகள் செய்தி கொடுத்திருக்கும்! பிழைப்பது அருளானால் சாவது அருளாகாமற் போவானேன்? செத்தது அசந்தர்ப்பமானால் பிழைப்பதும் ஏன் அசந்தர்ப்பம் ஆகக் கூடாது?

காடுகள்



காடு, ஒருநாட்டின் செல்வக் களஞ்சியங் களிலே மிகமுக்கியமான ஒன்றாகும். அந்த வளமும் திராவிட நாட்டில் குறைவற்ற வகையில் கொழித்துச் செழித்துக் கிடக்கிறது.

ஒரு நாட்டின் தட்ப-வெப்ப நிலையைச் சீராக்கி, அளவோடு வைத்துக் காக்கும் சீரிய பணியினை, இயற்கையின் தூதுவனாக இருந்து செய்துவருவது காடேயாகும்.

ஒரு நாட்டிற்கு மழை வளத்தை வாரி வழங்குவது, அந்நாட்டின் காட்டு வளமேயாகும். காடு இன்றேல் மழையிராது; மழை இன்றேல் நீர் நிலைகள் நிறையா; நீர் நிலைகள் நிறையாவிடின், பயிர் பச்சைகள் வளரா; பயிர் பச்சைகள் வளராவிடின், நாட்டுமக்களை பசி வாட்டும். மழை பெய்ய வேண்டியகாலத்துப் பெய்யாது போமேயானால், கடலால் சூழப்பட்ட உலகமானாலும், பசி உயிர்களை வாட்டியே தீரும் என்ற கருத்தை, வள்ளுவர்,

"விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி"

என்ற குறளால் நன்கு விளக்கிக் காட்டுகிறார்.

இன்றைய நாகரிக வாழ்க்கைக்கு மரவகைகள் எப்படியெப்படி யெல்லாம் பயன்படுகின்றன என்பதை யாவரும் அறிவர். கட்டிடங் கட்டுவதற்கும், மேஜைநாற்காலி தட்டு முட்டுச் சாமான்கள் செய்வதற்கும் மரம் தேவைப்படுகிறது. மக்களின் அன்றாடத் தேவையான வீட்டுக்கு விறகு, தொழிற்சாலைகளுக்கு விறகு ஆகியவற்றையும் காடுதான் தருகிறது. நாகரிக உலகத்தின் மிகச் சிறந்த தேவைகளான காகிதம் செய்வதற்கும், ரப்பர் தயார் செய்வதற்கும் காடுதான் மூலப்பொருளாகும். மேலும் விலங்கினங்களைக் காப்பாற்றிவரும் வரையாது வழங்கும் வள்ளலும் காடேயாகும்.

இத்தகைய நன்மைகளைச் செய்யக் கூடிய காடுகள், திராவிடமெங்கும் குன்றா வளமாகச் சிதறிக் கிடக்கின்றன.

காட்டுவளம் சென்னை மாநிலத்தில் மட்டும் சுமார் 25,800 சதுரமைலுக்குப் பரவிக் கிடக்கின்றது. இது சென்னை மாநிலத்தில் ஏறத்தாழ 20 சதவிகித நிலப்பரப்பாகும். திராவிடத்தின் பிற பகுதிகளாகிய திருவாங்கூர், கொச்சி, மைசூர், ஐதராபாத்தின் தென்பகுதி ஆகியவற்றிலுள்ள காட்டின் பரப்பைக் கணக்கிட்டாலும், சற்றேறக் குறைய இதே சத விகிதம்தான் கணக்குவரும். திராவிடத்தின் நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பங்கு காட்டு வளமாகும்.

திராவிடத்தின் காடுகளில், வேலைப்பாடுகளுக்கான மரங்கள் விறகுக்கான மரங்கள், சந்தனம், அகில், மூங்கில், தேக்கு, தோல் பதனிடுவதற்கான பட்டையுடைய மரங்கள், பிரம்பு, சோப்புக்கொட்டை, அரக்கு, புளி, தேன், மெழுகு, காகிதக் கூழ் செய்வதற்கான மரங்கள், ரப்பர், இவற்றைத்தவிர மா, பலா, பப்பாளி, டாப்பியாகோ, சின்கோனா, தென்னை ஆகியவை பெருகி காடுகள் தரும் செல்வங்களாக இருக்கின்றன.

யானை, குதிரை, எருது, மான், மயில் தோகை, கரடிமயிர், புலித்தோல், சிறுத்தைத் தோல், முயல், வரையாடு, குரங்கு ஆகியவைகளும் பயன் தரும் செல்வங்களாகக் காட்சியளிக்கின்றன.

நம்முடைய நாட்டிலே வாழும் கால்நடைகளில் ஏழில் ஒரு பங்கு காடுகளிலுள்ள புல்லையும், தழைகளையும் மேய்ந்து வளர்கின்றன.

சென்னை மாநிலத்தில் மட்டும் 1950-51ம் ஆண்டில், காடுகளின் மூலம் அரசாங்கத்துக்குக் கிடைத்த வருவாய் ரூ 1,86,26,000 ஆகும்.

காடுகளின் பயன் சரிவர உணரப்படாதகாரணத்தால், நாள்தோறும் சிறிது சிறிதாக அழிந்து வருகிறது. காங்கிரஸ் தியாகிகள் ஒருபக்கம் அரசாங்கக்காடுகளை அழித்துக் கொண்டு வருகிறார்கள்; கரிமூட்டை விற்போர் மற்றொரு பக்கம் அழிக்கிறார்கள்; கண்டபடி விறகு வெட்டுவோர் வேறோர் பக்கம் குறைக்கிறார்கள்; இவர்கள் எல்லோரும் செய்யும் செயலால் மரம் குறைந்து, அதனால் மழை குறைந்து, மழையின்மையால் மீதமுள்ள காடும், சிறிது சிறிதாகத்தானே அழிந்துபட்டு வருகிறது. காடுகள் முறையோடு பேணி வளர்க்கப்பட்டால், காடுகளும் வளரும்; நாடும் வாழும்!

புதிய வெளியீடு!



விலை ரூ. 1—0—0

திராவிடப் பண்ணை
தெப்பக்குளம் : : திருச்சி.

விற்பனையாளர்க்கு

'மன்றம்' ஒவ்வொரு இதழ் வெளிவரும் போதும், பிரதிகளுக்கான விலைப்பட்டியல் அவ்வப்போது உடன் அனுப்பி வைக்கப்படும். விற்பனையாளர்கள் விலைப்பட்டியலில் கண்ட தொகையை அவ்வப்போது தனித்தனியாகவோ அல்லது இரண்டு இரண்டு பட்டியலாகச் சேர்த்தோ அனுப்பிவைக்க வேண்டும். ஆனால் ஒன்றை மட்டும் விற்பனையாளர்கள் உறுதியாய்க் கொள்ள வேண்டும்--போதுமான முன் பணம் இல்லாத நிலையில் பிரதிகள் அனுப்பி வைக்கப் பட மாட்டா என்பதை. இது முதலிலிருந்தே கடைப்பிடிக்கப்படும் என்பதை விற்பனையாளர்கள் உணர வேண்டுகிறோம்.

நிர்வாகி, "மன்றம்"

தி. மு. க. 2-வது
மாவட்ட மாநாடு
சென்னையில்
ஜூலை 4, 5 தேதிகளில்
நடைபெறும்.

ஜூன் முதல் வெளி வருகிறது
"எழுச்சி"

தி. மு. கழகக் கருத்துக்களை ஏந்தித்திங்கள் இருமுறை வெளிவரும் ஓர் முற்போக்கு ஏடு.
ஆசிரியர்:—மா. செங்குட்டுவன்
எல்லா ஊர்களுக்கும் ஏஜெண்டுகள் தேவை.

நிர்வாகி, 'எழுச்சி', மாயூரம்.

வெளி நாடுகளில் மன்றம் விற்பனையாளர்கள்.

மலேயா:—
திராவிடா புக் எம்போரியம்
114, செரங்கூன் ரோடு
சிங்கப்பூர்.

தென் இலங்கை:—
எஸ். எம். மொன்னு முகமது
புத்தக விற்பனையாளர்
77, இரண்டாவது கிராஸ் தெரு
கொழும்பு-11

யாழ்ப்பாணம்:—
கோ. இராமசாமி
தமிழ்ப் பண்ணை
யாழ்ப்பாணம்.

Regd. No. M

இயற்கை அன்னை வண்ணச் சேலையுடுத்திக் குலுக்கி மினுக்கி, அசைந்து ஆடி, சிரிப்பு ஒலித்து, அழகு வீசி நடந்து சென்றுகொண்டேயிருக்கிறாள்! உயிர்கள் அனைத்தும் அவள் அழகுகண்டு மயங்கி உள்ளம் மகிழ்ந்து அவளோடு நடக்கின்றன! காரணம் அவளது வண்ணச் சேலையின் வனப்பேயாகும்! நீல வானிலே நீந்தி விளையாடும் வெண்ணிலா, செஞ்ஞாயிறு உமிழும் செக்கர் வானம், வண்ணஞ் சிதறி நிற்கும் வானவில், பச்சைப் பசேலென்ற பசும்புற் பரப்பு, வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும் மரஞ்செடி கொடிகள், பஞ்சவர்ணக்கிளி, பல நிறங் கொண்ட மயில் இவையெல்லாம் அவள் சேலையிலே காணப்படும் ஓவியங்களாகும்!

பலவர்ணம் கண்ணைக் கவரும்!
குளிர்ச்சி தரும்!
கருத்திலே இன்ப ஊற்றைப் பெருக்கும்!

- இயற்கை வெளியிலே காணும் வர்ணங்களை உங்கள் வீட்டிலே, மாளிகையிலே, மண்டபத்திலே பெறவேண்டுமா?
- கண்ணுக்குக் கவர்ச்சியும் உள்ளத்திற்கு உவகையும் உங்களுக்கு ஏற்படவேண்டுமா?
- உங்கள் வீட்டிலுள்ள மர-இரும்பு-உலோக வேலைப்பாடுகள் செல்லரிக்காமல், துரு அரிக்காமல், சீரழியாமல் இருக்கவேண்டுமா?
- அழகான கோபுரங்களையும், எழில் மிக்கக் கட்டிடங்களையும், வனப்புள்ள உள்ளகங்களையும் காணவேண்டுமா?
- கண்கவரும் ஓவியங்களைத் தாளிலும் தட்டியிலும், திரையிலும் தரையிலும், கற்சுவரிலும் காகித மலரிலும் காணவேண்டுமா?

அப்படியானால்

தன்மையில் சிறந்த, வகையில் உயர்ந்த, விலையில் குறைந்த, உறுதியில் நிறைந்த, புகழ்பெற்ற

S. V. அம்பாள் & கோ.

வர்ணங்களை வாங்குங்கள்.

வெளியூர் ஆர்டர்கள் உடனுக்குடன் கவனித்து அனுப்பப்படும்.

போன் நெம்பர் 3085

319-322, ராசப்ப செட்டித்தெரு, சென்னை-3.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M. A.,
at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1.